REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

| மலர் 21 | சுன்னாகம், கர வைகாசி கங. 27-5-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 42 |
|---|---|---|

JAFFNA COLLEGE LIBRARY 28 MAY 1951 VADDUKODDAI, CEYLON

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திரமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள், மேசை, 'பொக்கெற்'கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ தமிழறிஞர் சு. நடேசபிள்ளை அவர்கள் ஆற்றொழுக்குப்போல இனிமையாகப் பேசி முடித்ததும் அலையோசை கேட்டது. அந்த ஓசை இன்னும் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

# விஞ்ஞானத்தில் இலக்கியச் செறிவு

## காதலியைக் கண்டு மகிழ்ந்த கலைஞன்

ஈழகேசரி விசேஷ பிரதிநிதி

பேராசிரியர் க. ச. அருணந்தி அவர்கள் மேடையில் நின்றுகொண்டு 'இங்கே எனது காதலியைக் காண்கிறேன்' என்று சொன்னார். எனக்குப் பொல்லாத கோபம் வந்தது. நான் அவர் மனைவியோ என்று நீங்கள் நினைக்கக்கூடும். 'கடைசியில் மனிதன் காட்டிக்கொடுத்து விட்டாரே' என்று கோபப்பட்டேன். ஓகோ! நீ தான் அவர் காதலியோ என்று நீங்கள் நினைக்கக்கூடும். கடைசியில் யாழ்ப்பாணத்தவரின் காதல் நாடகங்களைக் காட்டிக்கொடுத்துவிட்டாரே என்று கோபப்பட்டேன். ஒரு மனிதன், பட்டப்பகலிலே வெட்ட வெளிச்சமாகப் பகிரங்க மேடையில் ஏறிநின்று, 'காதலியைக் கண்டேன் என்று கூறும் நிலைக்கு வந்துவிட்டாரே, இவருக்கு அறிவுக்கு நரைத்ததோ? வயதுக்கு நரைத்ததோ' என்று என்று நான் எண்ணினேன்

திரு. அருணந்தி அவர்கள் யாரைப்பார்த்து அப்படிக் கூறுகின்றார்கள் என்று அவர்பார்த்துக்கொண்டுநின்ற திக்கைக் கூர்ந்து கவனித்தேன். எனக்கு இன்னும் கோபம் அதிகரித்தது. அவருடைய பேச்சைக் கேட்டுப் பெண்கள் எல்லாம் நாணித் தலைகுனிந்திருக்கவேண்டுமே. அதுதானில்லை அவர்கள் 'ஆகா'ப் போட்டு ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டிருக்கிறார்கள். எனது கோபம் என்னளவில் நின்றுகொள்வது வழக்கமாகையால் வாசகர்கள் மேலே என்னசெய்தேன் என்று நினைக்கத் தேவையில்லை.

திரு. அருணந்தி அவர்களின் காதலி தமிழ்த்தேவி என்று உணர்ந்ததும் கோபம் கை பரிமாறுகிற அளவுக்கு வந்தது. தமிழ்த்தேவியை நாங்கள் எல்லாம் காதலித்துக்கொண்டு தவங்கிடக்க இவர் யார் தன்னுடைய காதலி என்றுசொல்வதற்கு?' மேடையால் இறங்கி வரட்டும் பார்ப்போம்' என்று கறுவிக்கொண்டிருந்தேன். இதைத் தொண்டருக்குள் அரியதொண்டனுக் கடமையாற்றிய ஸ்ரீ மார்க்கண்டன் அவர்கள் உணர்ந்து குளிர் பானம் கொணர்ந்து வழங்கினர். அவருடைய குளிர்பானமும் கொதிநிலை அடையுமோவென எண்ணியிருந்த சமயத்தில் திரு. அருணந்தி அவர்கள் ஒரு சுவையான கதையைச் சொல்லி எல்லோரையும் குளிர்வித்தார்.

### சூடும் குளிரும்

இப்படி அடிக்கடி கொதிநிலை அடையும் நண்பர்களும் விழாவுக்கு விஜயம் செய்வார்கள் என்று, உணர்ந்துபோலும், குளிர்பானம் உதவும் தொண்டர்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ஒருவர் கொழும்புச்சோடா, 'ஓறேஞ் பாளி' கொண்டுவருவார். ஒருவர் சர்க்கரைத் தண்ணீர் கொண்டுவருவார். ஒருவர் குளிர்ந்தநீர் என்று கொண்டுவருவார். கொழும்புச் சோடாத் தொழிற்சாலையை இங்கேயே கொண்டுவந்துவிட்டார்களோ என்று நினைக்கவேண்டியிருந்தது. சோடாவால் முழுகவார்த்தார்கள் என்றுதான் கூறவேண்டும். இருகையும் எடுத்துக் கூப்பிப் போதும் தப்பி போதும்என்று சொல்லவேண்டியிருந்தது. சென்ற கிழமை, குளிர்பானம் விநியோகித்த தொண்டர் ஒருவரைக் கடைத்தெருவில் கண்டு ஒரு சோடா வாங்கித் தரும்படி கேட்டேன் 'இது தமிழ்விழா அல்ல' என்றார். 'என்றுவரும் இனியந்தவிழா' என்று பாடவேண்டியதுதான்.

திரு. அருணந்தி அவர்கள் சொன்ன கதையைநினைத்து, இப்பொழுது சிலர் தங்கள் வீடுகளிற் சிரிக்கின்றனர். தமிழ் விழாவுக்குச் சென்ற பலருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று ஒரு கதை வருவதற்கு அருணந்தி அவர்களின் கதையும் ஒரு காரணம்.

ஒரு செவிடனை, வழிப்போக்கன் வழி விசாரித்தபொழுது, கறுவல் நாம்பனென்றாலும், வெள்ளை நாம்பனென்றாலும் எது வந்தாலும் விற்கிறது தான் என்று கூறினானும். அச் செவிடனுக்கு அவன் மனைவி உணவு கொண்டுவந்தபொழுது, ஒருவன் மாடு விசாரித்துக்கொண்டு போவதைக் கூறினான். அவள், 'நெடுகலும் நீ உப்புக் காணாது, புளி காணாது என்று எனது சமயலைக் குறை கூறுவாய். இன்றைக்கு நான் சமைக்கவில்லை. உனது மகள்தான் சமைப்பது கேட்டுப்பார்' என்று சொன்னாள். அவன் தனது மகளைக் கேட்டபொழுது 'இளையம்மானின் மகன் என்றாலுஞ்சரி, மூத்தம்மானின் மகனென்றாலுஞ்சரி எனக்கு யாரென்றாலும் சம்மதந்தான்' என்று சொன்னாளாம். இதைக்கேட்டு எல்லோரும் சிரித்தோம். இப்படி ஒரு செவிட்டுக் குடும்பத்தின் கதையை திரு. அருணந்தி அவர்கள் சுவைத்துக் கூறினர். அவர்களுடைய அடி மனந்தான் அப்படி அவர்கள் கூறியதற்குக் காரணம் என்றும் கூறினர். கல்கி ஆசிரியர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் இந்தக் கதையை ஞாபகமூட்டினர்.

திரு. அருணந்தி அவர்களின் பேச்சு ஒரு விஞ்ஞான விஷயமாக இருந்தபோதிலும், இலக்கியம்போல எல்லோருக்கும் சுவைத்தது. அடி மனத்தை விளக்கப்படுத்துவதற்கு அவர் பல கதைகளை எடுத்துக் கூறினர்.


### இலக்கியச் சுவை

ஒருவர் இரண்டு நிமிஷத்துக்கு ஒரு முறை தலையாட்டுவாராம். தலையாட்டத்திற்குக் காரணமென்னவென்று பிரபல உளத்தத்துவ வைத்திய நிபுணர்கள் ஆராய்ந்தார்களாம். 1918-ம் வருடம் நடந்த யுத்தத்தில் முன்னணிப்படையில் சேவை செய்த அவர் காயப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டாராம். குண்டுபோட்ட இடத்தில் நின்று காயப்பட்டமையால் அவருக்கு ஒரே திகிலாய் இருந்ததாம். வைத்தியசாலைக்குக் கொண்டுபோன பொழுதும் திகிலாய் இருந்தாராம். அங்கேயிருந்த வைத்தியர்கள் இங்கே குண்டுபோட மாட்டார்கள் என்று அவருக்குக் கூறினர்களாம். 'இங்கே குண்டுபோட மாட்டார்களா? ஆஆஅ! என்று கேட்டுத் தலையாட்டியவர்தான். தொடர்

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]



பன்மொழிப் புலவர் மீனாட்சி சுந்தரனாரின் பேச்சு அலையோசைபோல எடுப்பாக அமைந்து அனைவரையுங் கவர்ந்தது. தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சி பற்றி இவர் தமிழ் விழாவில் விரிவுரையாற்றினர்.



இஸ்லாமியரும் தமிழும் என்னும் பொருள்பற்றி திரு. எஸ். எம். கமால்தீன் பி. ஏ. அவர்கள் தமிழ் விழாவில் விரிவுரையாற்றினர். அதன் சுருக்கம் அடுத்த வார இதழில் வெளியாகும். இவர் கொழும்பிலுள்ள ஸாஹிராக் கல்லூரியிற் பணியாற்றுகின்றார்.

# நவீன உலோகாயதம்

## சைவ இளைஞர் மகாநாட்டிற் கண்டனம்

யாழ்ப்பாணம், 25-5-51

இந் நாளில் சைவசமய ஆக்கமும் திருநீற்றின் விளக்கமும் குறைந்து வருதலும் உலோகாயதம் முதலாய புறச்சமயக் கொள்கைகள் பெருகியும் வரும் கேடான நிலையினைக் கண்டு வருந்தி உங்கள் செயலாளரும், எங்கள் நண்பருமாகிய திரு. வே. சங்கரப்பிள்ளையவர்கள் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறித்திருந்தார்கள். எங்கள் நாட்டிலும் இந் நிலை விளைந்து வருகின்றது கண்டு அடியேனும் வருந்தி இறைவரிடம் விண்ணப்பித்த துண்டு என அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை ஆண்டு மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கோயமுத்தூர் சிவக்கவிமணி ஸி. கே. சுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்டார்.

இம் மகாநாடு சென்ற 20, 21, 22-5-51-ம் நாட்களில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவர் தொடர்ந்து பேசியதாவது ஸ்ரீமத் ஆறுமுக நாவலர் பெருமானும், மற்றும் பல பேரறிஞர்களும் அவதரித்து நாடுய்ய நல்வழி காட்டிய பெருமையும் உங்கள் நாட்டுக்குரிய சிறப்பு. உங்கள் நாட்டு மற்றொரு பெரியார் ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமார முனிவர். இவர்கள் சிறுபோதில் இங்கு விட்டகன்றவர். பின்னை இங்கு வாரமலே இறைவன் திருவடியடைந்தனர். இவர்களை உங்கள் நாடும் மறந்து விட்டது. இவர்கள் சூரியனார் கோயில் ஆதினத்திற் சார்ந்து பயின்று வடமொழி தென்மொழியிரண்டிலும் மிகவல்லுநராய் விளங்கியதோடு, முந் தீக்கையும் முறையே பெற்றுச் சைவ சித்தாந்த சாத்திரங்களை அவ்வாதீன முதல்வரிடம் உபதேசிக்கப்பெற்றுப் பெருந்தவ முனிவராய் விளங்கினர். இவர்களது நாடும் நினைவும் என்ஞான்றும் எனது நினைவினுள் வரக்கடவன.

முதலியார் அவர்கள் தமது பேருரையிற் சைவம், தமிழ் என்று வரும் இரண்டு சொற்பொருள்களைப் பற்றித் தமது கருத்தை விளக்கியிருந்தார்.

இதற்கு முன் பல் ஆண்டுகளில் இங்கு வந்த சிவக் கவிமணி முதலியார் அவர்கள் யாழ்ப்பாணம் சைவமகா நாட்டுக்கு மிகச் சிலரே வந்திருப்பதைக் கண்டு பெரிதும் வருந்தினர்.

திரு. வி. வீரசிங்கம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். "ஒரு போலி நவீன உலோகாயதம் தென்னிந்தியாவிலிருந்து கிளம்பி இலங்கையை படைந்திருக்கிறது. இதற்குப் பரிகாரம் நடக்கும். அது சைவ முறைப்படி நடக்கும். நடத்துபவன் ஒருவன் உளன்......" எனவும் அவர் தமது பேச்சிற் குறிப்பிட்டிருந்தார்.

சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், திரு. ஏ. தியாகராஜா, திரு. வி. வீரசிங்கம் என்பவர்களும் தலைமை வகித்தனர். பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள், சித்தாந்தரத்நாகரம், வித்துவான் சு. முத்துமாணிக்கவாசக முதலியார், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, திரு. மு. ஞானப்பிரகாசம், செல்வன் எஸ், தனஞ்சயராசசிங்கம், செல்வி. கே. செல்லாச்சி, ஸ்ரீமதி மீனாட்சி, பொன்னுத்துரை, திரு. சி. கந்தையா பி. ஏ, பண்டிதர் மீசா. இளமுருகனார், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை ஆகியோர் சைவம் சம்பந்தமான விரிவுரைகள் ஆற்றினர்.

## நமது நிருபர் கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

### கொண்டேசடி

- இந்து ஆலய சீர் திருத்த விசாரணை நடைபெற்றதாம்.
- விசாரணைச் சபையினர் அறிக்கை வெளியிட்டனராம்.
- அந்த அறிக்கையை எரிக்க வேண்டுமாம்.
- இப்படிக் கூக்குரலிடுவது பெரும் பைத்தியக் காரத்தனமாம்.
- அறிக்கையின் ஒரு சில பிரதிகளை எரிக்கலாமாம்.
- ஒரு சில பிரதிகளை எரித்தாலும் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் பத்திரமாக இருக்குமாம்.
- அறிக்கை ஏற்கக் கூடியதல்ல வென்றால் அது தவிர்க்கப்பட வேண்டுமென்று சொல்வதே சரியானதாம்.
- சரியான காரியத்தையே படித்த பெரியார்கள் செய்வார்களாம்.
- சைவ மகாநாட்டுத் தலைவரே இதைச் சொன்னாராம்.
- அறிக்கையை எரிக்கவேண்டுமெனச் சொன்னவர்கள் இதைக் கேட்டு எரிந்து புகைந்தனராம்.
- எரிகின்ற வயிற்றிலே புளியைக் கரைத்து ஊற்ற வேண்டுமாம்.
- இலக்கிய நூல்களை எரிப்பவர்களும் இருக்கின்றனராம்.
- இந்து ஆலய விசாரணைச் சபையாரின் அறிக்கையை எரித்தால் இலக்கிய நூல்களையும் சிலர் எரிப்பார்களாம்.
- இராமாயணத்தை எரிக்க வேண்டுமெனச் சொல்பவர்களும் இருக்கின்றனராம்.
- தமிழ் இலக்கிய நூல்களை எரிப்பவர்கள் சைவர்கள் அல்லவாம்.
- சைவர்கள் சமய நூல்களை எரிக்க மாட்டார்களாம்.
- அப்படியானால் சைவாலய சீர்திருத்த அறிக்கையையும் எரிக்கமாட்டார்களாம்.
- சைவர்கள் எனப்படுவோர் அதை நெருப்பில் இடுவார்களானால் அவர்கள் சைவர்கள் அல்லவாம்.
- சைவமும் பௌத்தமும் வெகு தூரமாம்.
- சைவமும் பௌத்தமும் சிங்களமும் இலங்கையில் உன்னத நிலை பெற வேண்டுமாம்.
- மந்திரி பண்டார நாயகா இதற்காகப் பாடு படுகின்றாராம்.
- துட்ட கைமுனுபோலவே மந்திரி பண்டாரநாயகாவுக்கும் 'முடக்கல்' வியாதியாம்.
- துட்டகைமுனு கட்டிலில் முடங்கிக் கிடந்த கதை பழங் கதையாம்.
- எல்லாள மன்னனுடன் கைமுனு போர் புரியக் கிளம்பினானும்.
- தமிழருடன் சண்டைக்குப் போகவேண்டாமென்று கைமுனுவின் தகப்பனார் தடைசெய்தாராம்.
- தமிழரைத் துரத்திவிட்டு பௌத்தத்தைப் பரப்ப வேண்டுமென துட்டகைமுனு விரும்பினானும்.
- இந்த விருப்பமே மந்திரி பண்டாரநாயகாவுக்கும் உண்டாகியிருக்கின்றதாம்.
- இதற்குத் தடையிருப்பதால் மந்திரிக்கும் கைமுனுவின் வியாதி பிடித்துவிட்டதாம்.
- இந்த வியாதிக்குத் தமிழரசுக் கட்சித் தலைவரிடம் மருந்திருக்கின்றதாம்.
- மருந்து கொடுக்க முன்னர் நாடி ஓட்டத்தைப் பார்க்க வேண்டுமாம்.
- சிங்களரும் தமிழரும் மாதன் ஓட்டத்திற் கெட்டிக்காரராம்.
- கெட்டிக்காரன்புளுகு எட்டுத்தினங்களிலே தெரியுமாம்.

## ஆச்சிரம விழா

மருதனார்மடத்திலுள்ள கிறிஸ்தவ சேவா ஆச்சிரம சரித்திரத்தில் முதல்முறையாகச் சமீபத்திற் செப விழா ஒழுங்கு செய்யப்பட்டது. ஆச்சிரமத்துக்கு மாத்திரமல்ல, யாழ்ப்பாணக் கிறிஸ்தவசபைச் சரித்திரத்திலும் இதுவே முதல் செப விழாவாகும். யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் விஜயம்செய்தார்கள்.

விழாவை வணக்கத்துக்குரிய கனம். செல்வரத்தினம் போதகர் பிரார்த்தனையோடு திறந்துவைத்தார். வணக்கத்துக்குரிய கனம் கயில்ஸ் போதகர் அவர்களும், கொழும்பைச் சேர்ந்த, வணக்கத்துக்குரிய கனம் கெல்சன் ஐயர் அவர்களும் பிரதம பிரசங்கிகளாக வந்திருந்தார்கள். இவர்களின் பிரசங்கங்கள், எல்லோர் மனதையும் கரைத்தது எனலாம். தியானம், செபம், திருவிருந்து, வேதாராய்ச்சி, அமைதி, காத்திருத்தல் இவைகள் ஒன்றன்பின் ஒன்றாய் நடைபெற்றன. சபையோரின் உற்சாகம், ஊக்கமான செபங்கள், காத்திருப்பு முதலியன பெரிய ஆசீர்வாதமாய் இருந்தன.

அதிகாலை ஐந்துமணிக்கே கீத ஒலியானது எம்மைத் துயிலெழச் செய்துவிடும். பின் மத்தியானப் போசனம் வரை செப, தபங்கள் நடைபெறும். சாப்பாட்டின் பின் கற்ற பாடங்களை இரை மீட்பதற்காக, சிறு ஆறுதல் உண்டு. பின் மறுபடியும் இரவு பத்துமணிவரை, தொடர்ந்து ஆராதனைகள் நடைபெறும். இரவு மின்சார ஒளி அணைந்ததும், பெரிய அமைதி நிலவும். ஒவ்வொரு நேரத்திற்கும் ஏற்ற உணவு வசதிகள் செய்திருந்தமை போற்றற்குரியது.

விழா அதிக வெற்றிகரமாகவே முடிந்தது. விழாவினால்ஏற்பட்ட சில உன்னத படிப்பனையைக் கீழே குறிப்பிடுகிறேன்.

"இயேசுவுக்குப்பின் செல்வதே கிறிஸ்த சீஷியம். இயேசு கிரியை செய்யும் கர்த்தராக இருக்கிறார். அவர் எங்கே தன் கிரியையை நடத்துகின்றாரோ, அங்கே சென்று, அவர் கற்பிப்பதைச் செய்வதே, நம்முடைய உத்தரவாதமாகும். அவர் கிரியை செய்கின்றார் என்பதை உணர்ந்து, அவர் கிரியை செய்யும் இடத்திலே, அவருக்குப் பின் சென்று உழைப்பதே நம்முடைய ஊழியமாகும்"

விழா முடிவுற்றதும் ஆச்சிரமத்தை விட்டுப் பிரிவது கஷ்டமாகவே காணப்பட்டது. அதற்கு அவர்கள் காலையில் கொடுத்த பயனுகலந்த இனிய பாற்கஞ்சியும் ஒரு காரணமாகும்.

—வி. வி. கே.


சகல பயிர்களுக்கு

**CCC பசளைகள்**

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

**நாங்கள்**

**C C C**

**கலவைப்பசளைகளை**

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

**கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி,**
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

**The Colombo Commercial Company, LIMITED.**

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4271]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சங்க இலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தைக் கவரும் முதற் பண்பு ஒன்றே உலகம் என்ற உயரிய மனப்பான்மையாம்.

# சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு

தனிநாயக அடிகள்
எம். ஏ., எம். லிட்

சுவாமி தனிநாயகம் அவர்கள் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்து ஊர்காவற்றுறையிற் பிறந்து வளர்ந்த இத் தமிழ் அறிஞர் இப்போது தூத்துக்குடியிலே செந்தமிழ்ப் பணியாற்றி வருகின்றார். யாழ்ப்பாணத்துத் தமிழ் விழாவின்போது இவர் ஆற்றிய விரிவுரையை இங்கு வெளியிட்டுள்ளோம். ப-ர்:

பண்டைக்கால இலக்கியச் செல்வங்களைப் படிக்கும் பொழுது, நம் முன்னோர் கொண்டொழுகிய வாழ்க்கையமைப்பின் சிறப்பியல்புகளை ஆராயும்பொழுது, அவர்களுடைய இயற்கை யீடுபாடு, அழகொடு இரண்டறக் கலத்தல், தூய கொள்கைகள், வாழ்க்கையின் குறிக்கோள்கள், நீதியும் ஒழுக்கமும் ஒருங்கமைந்த உயர்ந்த அரசியலமைப்பு முறை — இவை யாவற்றையும் ஆராயும்பொழுது — இற்றை ஞான்று தமிழரென அழைக்கப்பெறும் நாம் உண்மையில், நம் முன்னோரின் வழித் தோன்றல்கள் தாமோ — என்ற ஐயங்கூட என்னையறியாமலே என்னுள்ளத்திலே உதிக்கின்றது. ஐரோப்பிய நாகரிகத்துக்கே அடிப்படையாயிருந்த கிரேக்க நாட்டிற்கு ஏற்பட்ட வராலாறே நம் நாட்டிற்கும் ஏற்பட்டுவிடுமோ—என்ற அச்சமுங் கூட உடன் தோன்றுகின்றது. பைரன் என்ற ஆங்கிலப் புலவர் கிரேக்க நாட்டின் நிலையைக் கண்டு கண்ணீர் சொரிந்தது போலவே, தமிழ் நண்பர் நம் நிலையையுங் கண்டு வருந்துவதற்குக் காரணங்கள் பல உளவென்பதற் கையமில்லை. இது நிற்க,

நமக்கு எட்டியுள்ள நூல்களிற் கடைச்சங்க நூல்களெல்லாம் தமிழிலக்கியத்தின் 'உயர்வு நிலை' யில் இயற்றப் பெற்றனவாகக் கூறுவாருளர். எனினும், பல சான்றுகளிலிருந்து, இவ்விலக்கியமெல்லாம் ஒரு 'கடைக்கால்' இலக்கியம் என்றே கருதுதற்கு இடமுண்டு. 'கடைக்கால்' இலக்கியமே இத்துணை சிறந்து விளங்கு மென்றால், உயர்வு நிலையில் மலர்ந்த இலக்கியப் பண்பாடு எத்துணை சிறந்ததாயிருந்திருத்தல் வேண்டும்!

## ஒன்றே உலகம்

இனி, இங்ஙனம் சிறந்த இச் சங்ககால இலக்கியத்தின் சிறப்பியல்புகளைச் சிறிது ஆராய்வோம். சங்க இலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தைக் கவரும் முதற் பண்பு ஒன்றே உலகம் என்ற உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அரசியலறிஞர் எழுதி வெளியிட்ட One World (ஒரே உலகம்) என்ற நாலை உலகம் இனிதாய் வரவேற்றது. அந்நூலில் அவர் எழுதிய முதற் சொற்கள் "வருங்காலத்தில் நம் சிந்தனை உலகாங்கு பரந்திருத்தல் வேண்டும்" இன்றைய இருபதாம் நூற்றாண்டு உலகினர்க்கு இக் கருத்து இத்துணை மகிழ்வு அளிப்பது பற்றித் தமிழராகிய நாம் சிறு புன்முறுவல் அரும்பி நிற்கின்றோம். ஏன்? ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னமே தாமே, தமிழறிஞர் இதை உணர்ந்திருந்தனர்; உணர்ந்ததை உயர்ந்த சொல் வடிவில் உரைத்துள்ளனர்:

"யாதும் ஊரே; யாவருங் கேளிர்"
"பெரிதே உலகம்; பேணுநர் பலரே"
"எத்திசைச் செலினு மத்திசைச் சோறே"
"யாதானு நாடாமால், ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு"—

என்றெல்லாம் சங்ககால நூல்கள், யாண்டும் வலியுறுத்துரைத்தல் காண்க. இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது?

"யவனர் தந்த வினைமாண் கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்ததன்"

பயனாகவும், மொழி பெயர் தேயங்கட்கும், கடல் கடந்து வேற்று நாடுகட்கும் சென்ற தன் பயனாகவும், மூவேந்தருடன் குறுநில மன்னர்க்கும், பிறநாட்டு மன்னர்க்கும் உண்டான தொடர்பாலும் உறவாலும், தமிழர் இத்தகைய பரந்து விரிந்த மனப்பான்மையையும் நோக்கங்களையும் பயின்றறிந்து வளர்த்துக்கொண்டாராதல் வேண்டும்.

பெருமை வாய்ந்த நம் சங்க இலக்கியத்தின் பிறிதொரு இயல்பு யாதெனில், அஃது எத்துணைத் தொன்மை வாய்ந்ததாயினும் — எக்காலத்தும், எந் நாட்டவர்க்கும் இலக்கியச் சுவையை அளிக்கும் தன்மையாகும். ஷேக்ஸ்பியர், காளிதாஸன், கம்பன் போன்ற புலவர்களைப் படித்து அவர்கள் நமது காலத்தவரே போலத் தோன்றுவதைக் கண்டு இன்புற்று வருகின்றோம். இப் பண்பை 'இக்காலத் தன்மை' என்ற தொடராற் குறிப்போம். 'இக்காலத்தன்மை' என்ற சிறப்பியல்பு உள்ளதனாலேயே சங்க கால இலக்கியங்கள் என்றும் குன்றா இளமையுடன், புதுமை அழகும், புதிய கருத்தும் பெற்று இன்பம் பெருக்கி வருகின்றன. 'இக்காலத் தன்மைப்' பண்பில், ஐரோப்பிய, ஆசியப் புலவர் யாவரினும் நம் சங்ககாலத் தமிழ்ப் புலவர் சிறப்புற்றொளிர்கின்றனர்.

## பரந்த நோக்கம்

மேலே நாம் எடுத்துக் காட்டிய 'ஒரே உலக' மனப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# முஸ்லீம்களுக்கு முதுதமிழ்ப்புலவரின் சேவை

எஸ். எம். கமால்தீன்
ஆசிரியர்ஸாஹிராக்கல்லூரி,கொழும்பு

பொதுவாகத் தமிழ் நாட்டுமுஸ்லிம்களும், விசேஷமாக இலங்கை முஸ்லிம்களும் தங்கள் மத்தியிலே மகத்தான தொண்டு புரிந்து வந்த ஒரு தமிழ்ப் பெருமகனை இழந்துவிட்டனர். இது அவர்களுக்கு ஈடு செய்ய முடியாத நட்டமாகும். இலங்கையிலே இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றியும், இஸ்லாமிய தத்துவங்களைப்பற்றியும் நன்குணர்ந்த ஒருவர், அதுவும் ஒரு தமிழ் மகன் இருந்தாரென்றால், அது முது தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்களே யாவர்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலே தலைமைத் தமிழ் ஆசிரியராக இவர் கடமையாற்றிய சுமார் இருபத்தெட்டு ஆண்டுகளுள்ளே முஸ்லிம் மாணவரிடையே சிறந்த தமிழார்வத்தை உண்டுபண்ணி வைத்தார். முஸ்லிம் மாணவருக்காக இவர் எழுதிய பாடல்கள் பல. இப்பாடல்களைப் படிப்போர் புலவரின் இஸ்லாம் மத அறிவைப்பற்றி வியப்புறுவர். முஸ்லிம் புலவர்களைப்பற்றி, விசேஷமாக இலங்கை முஸ்லிம் புலவர்களைப்பற்றி அவர் ஆராய்ச்சி செய்து பல அரிய விஷயங்களைத் தாம் அடிக்கடி நிகழ்த்திய பிரசங்கங்களில் வெளியிடுவார். இத்துறையில் அவர் எவ்வளவு ஆர்வமுள்ளவரென்பதை அவர் மறைவுக்குச் சில நாட்களுக்கு முன் எனக்கனுப்பிய கடிதமொன்றிலிருந்து அறியலாம். இதிலே அவர் கரித்தீவுக் கரீம் புலவர், எருக்கலம் பிட்டி பக்கீர் முஹைறுபதீன் புலவர் போன்ற இலங்கை முஸ்லிம் புலவர்களைப்பற்றி எழுதியுள்ளார். பக்கீர் முஹைறுபதீன் புலவரைப்பற்றி சில விபரம் கூறிப்பின்வருமாறுமுடித்துள்ளார். "இக்கவிஞர் பெருந்தகை இஸ்லாமிய தத்துவங்களையும், நாயகத்தையும் பற்றிப் பாடிய கீர்த்தனங்களுக்கு அளவில்லை. யாவுங் கிடைக்குமாயின் பெரிய நூலாக வெளியிடலாம்." இது போலவே இன்னும் பல புலவர்களைப்பற்றியும் அவர்களின் பாடல்களைச் சேகரிப்பதின் அவசியத்தைப்பற்றியும் அவர் அடிக்கடி என்னிடம் கூறியுள்ளார்.

சென்ற வருடம் ஜனுப் வ. மி. சம்சுதீன் அவர்களும், நானும் வேண்டிக்கொண்டதன் பேரில் அவர் உமறுப் புலவரின் முதுமொழி மாலை என்னும் சிறு நூலை வழுக்கள் நீங்கிய ஒரு பதிப்பிலிருந்து திருத்தி சாபுத இல் கொடுத்தார். இதுபோலவே, காசிம் புலவரின் திருப்புகழையும் செம்மைப் படுத்தித்தர என்னிடம் ஒப்புக்கொண்டிருந்தார்.

முஸ்லிம் மாணவருக்கான பாடப்புத்தகங்கள் இல்லாக் குறையை நிவர்த்திப்பதற்கு புலவர் மிகுந்த ஆர்வமுடையவராயிருந்தார். இதற்கான ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்த சமயமே அவர் எம்மத்தியிலிருந்து பிரிக்கப்பட்டு விட்டார்.

ஸாஹிராக் கல்லூரியிலிருந்து அவர் இளைப்பாறியபோதிலும் இக்கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராகவேயிருந்து வந்தார். இலங்கை அரசினர் நடத்திய மாதனஞ்சலோட்டப் போட்டியிற் புலவர் முதற்பரிசு பெற்றமையை முன்னிட்டு ஸாஹிராக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தினர் வாசித்தளித்த வந்தனோபசாரப் பத்திரத்தில் காணப்படும் கீழ்க்கண்ட பகுதி இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.—

.......... முஸ்லிம்களாகிய எங்கள் மத்தியில் நீங்கள் இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய அரிய தொண்டிற்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பாடுடையோம். .........உங்களுடைய சலிப்பற்ற உழைப்பினால் எமது கல்லூரியில் தமிழுக்குக் கௌரவமான ஓர் இடம் இன்று அளிக்கப்பட்டுள்ளது. உங்களுடைய பெயரும் ஸாஹிராவின் சரித்திரத்தில் ஓர் உன்னத இடம் பெற்றுவிட்டது."

பரந்த நோக்கமும், உயர்ந்த இலட்சியமும் கொண்டு மிகவும் எளிய வாழ்க்கை நடத்தி முஸ்லிம்கள் மத்தியிலேயே தமது சீவியத்தின் பெரும் பகுதியை அவர்கள் சேவையிற் கழித்த புலவர் நல்லதம்பி அவர்களுக்கு முஸ்லிம உலகு என்றும் கடமைப்பட்டதாயிருக்கும். புலவரின் நாமம் முஸ்லிம்கள் மத்தியிலும் தமிழர்களிடையும் குன்றாப் புகழுடன் என்றும் விளங்கும் அவரது ஆன்மா சாந்தியடைவதாக.

# பாரதி என் குழந்தை

இ. சிதம்பரப்பிள்ளை


நெஞ்சத் தடத்துள் நின்றரும்பி
நெருப்பின் நிறத்தி னிதழ்விரிந்து
நிலவின் முறுவற் பூவுகுத்து
நிறைவுக் காய்கள் குலைசாய்த்து
செஞ்சொற் றமிழின் கவியெனவே
சிவந்து கனிந்து ரசநிறைந்து
ஜெகமு முயிரும் திளைத்திளைக்கச்
செந்தேன் சொரியும் பாரதியே!
பஞ்சப் புலத்துப் பகைவேடர்
பதுங்கி யொழிந்து மறைவதற்குப்
பதியே உனது ஒளியன்றிப்
பாரில் வேறு முண்டாமோ?
கஞ்சப் புதுவெண் மலருறையுங்
கனியே தாலோ தாலேலோ
கவிக ளுளத்திற் கண்வளருங்
கரும்பே தாலோ தாலேலோ. 1

தேவர் மொழியுந் தென்மொழியும்
தெரிந்து மெருகு புனைந்தணிகள்
செய்து தந்தா ராராரோ?
செய்வா ரின்னு மாராரோ?
நாவல் லாருன் னருளாலே
நடன விசையாந் நறவருந்தி
நைந்து நைந்துன் னடியினுக்கே
நடந்தார் நடப்பா ராராரோ
பூவல் குளங்க ளோடையிலே
பூக்கும் வெண்டா மரையினிலே
புலவ ருளப்பூம் பொய்கையிலே
புகுந்தாய் நீயு மாராரோ
காவற் கனியே கலையமுதே
கண்ணே தாலோ தாலேலோ
கமலா சனியே கண்ணிறைந்த
கருத்தே தாலோ தாலேலோ. 2

தந்தை சிவன்செய் தமிழ்க்கவியைத்
தருமிக் களிக்கக் கீரனதில்
தவறுண் டென்று தருக்கித்துத்
தழல்நெற் றிக்கண் கண்டுமவன்
'விந்தை பலவுஞ் செய்தாலும்
விரட்டி யென்னை விழித்தாலும்
விழைந்த தமிழ்நூற் பிழையினைநான்
விட்டும் வேறுஞ் செய்வேனோ?'
சிந்தை களிக்க இதுகேட்டுச்
சிறுமென் முறுவல் செய்தாயோ?
சினந்த சிவனின் சடைகண்டு
சிரித்து நடனம் புரிந்தாயோ?
கந்தம் வீசுங் கஞ்சத்தின்
கலையின் தேவி தாலேலோ
காளி தாசன் கவியுண்ட
கடவுள் தாலோ தாலேலோ. 3

—தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதய ஊற்று

கசின்

### அத்தியாயம் 21

## பொறிக்குள்ளே எலி!

'எலிப் பொறிகளில், வீமன் பொறி, தருமன் பொறி என்று பல இனமுண்டு. வீமன் பொறி உடனே கொன்றுவிடும். தருமன் பொறி எலியை உயிரோடு பத்திரமாய் வைத்துக்கொள்ளும்.'

—பொறியியற் சாஸ்திரம்

மகாதேவனும், லலிதாவும் நின்ற இடம் மூன்று பக்கமும் கடலாற் சூழ்ந்த இடம். கடலுக்குள் நீண்டிருந்த மலை முனையில் இராணுவக்காரர் கடலைக் கண்காணிப்பதற்காக ஒரு சிறு அறை கட்டியிருந்தனர். அந்த அறையின் 'வராந்தா'வில் நின்றுகொண்டு மகாதேவனும் லலிதாவும் சண்டையை ஆரம்பித்தனர்.

'நீங்கள் நான் எழுதிய கடிதத்துக்கு ஏன் பதில் எழுதவில்லை.'

'அது இருக்க, நீ ஏன் இவ்வளவு இளைத்துப் போயிருக்கிறாய்?'

'என்னுடைய இளைப்பு இருக்கட்டும்; ஏன் நீங்கள் பதில் எழுதவில்லையென்று முதலில் சொல்லுங்கள்.'

'நீ ஏன் காலையில் என்னுடன் ஒன்றும் கதையாமல் அறியாதவன் மாதிரிப் போனாய்; அதை முதலில் சொல்.'

'சரி சொல்லுகிறேன்; என்னுடன் கூட வந்தவர்தான் என்னுடைய மாமா. இங்கே 'மிலிற்றறி'யில் வேலையாக இருக்கிறார். நான் உங்களைச் சொல்லி, உங்களை விவாகஞ் செய்ய அவரை உத்தரவு கேட்டேன். அவர் மறுத்து விட்டார். காலையில் நான் உங்களோடு பேசுவதானால், உங்களை அவருக்கு அறிமுகப்படுத்தவேண்டிவந்திருக்கும். உங்களை அறிமுகப்படுத்தினால் நான் உங்களோடு பேசுவதை அவர் விரும்பமாட்டார். அதனால் உங்களோடு பேசாமற் சென்றேன். திருகோணமலைக்கு வருகிறவர்கள் கோணேசரைத் தரிசியாமற் செல்வதில்லை. ஆகையால் இப்பொழுது இங்கே சந்திப்பேன என்று எனக்கு அப்பவே தெரியும். சரி, இனி நீங்கள் சொல்லுங்கள்.'

'நான் சொல்வது இருக்கட்டும்; ஏன் என்னை அவருக்குப் பிடிக்கவில்லையாம்.'

'ஏனோ தெரியவில்லை; உங்களைத் தவிர வேறு யாரை விவாகஞ்செய்யக் கேட்டாலும் சம்மதிப்பாராம்; உங்களை மாத்திரம் கேட்க வேண்டாமாம்.'

'என்னை அவருக்கு எப்படித் தெரியும்? என்னை யாரென்று அவருக்குச் சொன்னாய்!'

'தாங்கள் இன்னாரின் சிடன் என்றும், இன்ன வேலையில் இருக்கிறீர்கள் என்றும் அவருக்குச் சொன்னேன். விசுவநாத சாஸ்திரிகளின் சிடன் என்றதுதான் அவர் வெறுப்பதற்குக் காரணம்போ லிருக்கிறது.'

'அவருக்கு என்னைப் பிடிக்கவில்லையானால் நாங்கள் இவ்விடத்தில் நின்று பேசுவது அழகல்லவே.'

'அவர் கோயிலுக்கு வரும் வழக்கமில்லை.'

'அவர் வந்தாலும் வராவிட்டாலும் நாங்கள் விவாகஞ் செய்ய முடியாதவர்களாய் இருக்கிறபொழுது ஒருவரை ஒருவர் மறக்க முயற்சிப்பதன்றி இப்படி நின்று கதைத்துக்கொண்டு நிற்பது பல வகையாலும் பிழையல்லவா?'

'அதெல்லாம் என்னைப் பொறுத்தது.'

'உன்னைப் பொறுத்ததானாலும் நான் உன்னை விவாகஞ் செய்ய முடியாத அளவில் இவ்விடம் நாங்கள் இதற்கு மேல் தாமதிப்பது அழகல்ல.'

'விவாகஞ் செய்ய முடியாது என்று இன்னும் நான் தீர்மானிக்கவில்லையே; நான் விவாகஞ்செய்தால் உங்களை; அல்லது இல்லை. எப்பொழுதோ உங்களுக்குச் சொல்லிவிட்டேனே!'

மகாதேவன் முகத்தில் மலர்ச்சி தோன்றி, மனத்தில் மகிழ்ச்சி தோன்றிக் கதைகள் குறும்புத்தனமாக மாறின.

'ஒருபோதும் விவாகஞ் செய்யாமல் இருக்கத் தீர்மானித்திருக்கும் ஒரு கன்னிப்பெண்ணுடன் பேசுவது பாவமும் கூட.'

அவளும் குறும்பாக, 'நீங்கள் என்னை விவாகஞ்செய்ய விரும்பவில்லை என்று சொல்லுகிறீர்களா?'

'இல்லை, உனது மாமாவின் அனுமதி யில்லையே என்று தான சொல்லுகிறேன்.'

'எனது விவாகத்திற்கு மாமாவின் அனுமதி பிரதானமானதாயிருக்கலாம். அனுமதியின்றி விவாகம் நடவாதென்று நான் கருதவில்லை.'

'நீ கருதாவிட்டாலும் உனது மாமா உன்னை இந்த 'மிலிற்றறி'க் கூட்டிலிருந்து வெளியில் விடப்போகிறாரா?'

இவர்களுடைய சம்பாஷணை இப்படிப் போய்க் கொண்டிருக்கும் பொழுது ஆறு மணி அடித்து எக்காளமும் ஊதி விட்டது. அதன் மேல் வெளியார் ஒருவரும் அங்கே நிற்கக் கூடாது.

சம்புலிங்கம் இவர்கள் வரவை நின்று பார்த்தான். அவர்கள் வந்தபாடில்லை. லலிதா தனது வீட்டுக்கு மகாதேவனைக் கூட்டிக் கொண்டு போயிருப்பாள் என்ற எண்ணத்துடன் லலிதாவை முதலில் சந்தித்த இடத்திற்கு வந்தான். அங்கேயும் காணவில்லை. எக்காளமும் ஊதி விட்டது. இனிமேல் அவன் தாமதித்தால் ஆபத்து. எப்படியோ லலிதா அறிந்தவளாயிற்றே; அவளின் உதவியுடன் அவன் வெளியில் வரலாம் என்று அவன் எண்ணிக் கொண்டு நடையைக் கட்டி விட்டான். சம்புலிங்கம் தனது விடுதியிலுள்ள நண்பர்களுக்கு, மகாதேவனின் நண்பன் ஒருவன் கோணேசர் மலையில் இராணுவ வேலையில் இருக்கிறான். அவன் அங்கே தங்கிவிட்டான் என்று சொல்லிவைத்தான்.

எக்காளத்தின் ஓசை மகாதேவனை நடுநடுங்கச் செய்தது 'நான் எப்படி இனி வெளியிற் போவது' என்று கேட்டுக் கொண்டு நடுங்கினான்.

'நீங்கள் பயப்பட வேண்டாம்; இங்கேயே இருங்கள்; உங்களுக்கு ஆபத்து ஒன்றும் வராது' என்று லலிதா உறுதி கூறினாள்.

இருந்த போதிலும்; பொறிக்கதவு பூட்டப்பட்டது போல் எக்காள ஓசை அவன் மனதில் திகிலையுண்டாக்கியது.

லலிதா, அவனைக் கூட்டிக் கொண்டு வந்து, இறங்கி வெளியே வந்து கோணேசர் கோயிலைக் காட்டினாள். சற்றுமுன் அவன் மனதில் பொங்கிய ஆனந்த வெள்ளமெல்லாம் எக்காளஓசையால் வற்றி வரண்டு விட்டது போல, அங்கேயும் கோயில் இருக்கவில்லை. 'எனது கண்களுக்குத் தெரியவில்லையே' என்று மகாதேவன் கேட்டான்.

'உங்கள் கண்களுக்கு மாத்திரம் அல்ல; ஒருவருக்கும் தெரியாது. ஆலயம் இருந்த இடம் கிறீஸ்தவர்களால் இடிக்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)


## அன்புக்கு அறிகுறி

அன்பர்களுடன் தொடர்பு வைத்திருப்பதற்கு சிறந்த வழி

**ஈழகேசரி**

ஒரு வருடச் சந்தாப்பணத்தையும் இவ்விண்ணப்பப்பத்திரத்தையும் சிரப்பி அனுப்பிவிட்டால் ஈழகேசரி பிரதிவாரமும் உங்கள் உற்றார், உறவினர் அன்பர்களைச் சேர்ந்தடையும்.

சந்தா அதிபர்
ஈழகேசரி
சுன்னாகம்

ஐயா,

பின்வரும் பெயருக்குத் தங்கள் ஈழகேசரியை அனுப்பிவைக்கவும். இத்துடன் ஒரு வருடச் சந்தா ரூ.6/- வெள்ளி 6/- முற்பணமாக அனுப்பியுள்ளேன்.

...........................

ஒப்பம்

பெயரும் விலாசமும்:

...........................

...........................

...........................

...........................


## சேவையே கௌரவம்

## சர்வோதய சம்மேளனம்

மகாத்மா காந்தியடிகள் காலஞ் செல்லச் சிறிது நாட்களுக்கு முன்னர் ஒரு புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்தனர். அதன் பெயர் சர்வோதய சங்கம். இச்சங்கம் அரசியல் விவகாரங்களில் ஈடுபடாது கிராமச் சிரமைப்பையே நாடி உழைக்க வேண்டுமெனத் திட்டமிட்டு வைத்தனர். கிராமங்களில் எல்லா நன்மைகளும் உதயமாகும் சங்கமென்பதே இதன் பொருளாகும்.

### சிவராம் பள்ளியில்

இச் சங்கத்தின் மூன்றுவது ஆண்டுச் சம்மேளனம் சமீபத்திலே ஹைதராபாத் சமஸ்தானத்திலுள்ள சிவராம்பள்ளி என்ற இடத்தில் கூடியது. இந்தச்சங்கத்தில் உள்ள அங்கத்தினர் 4000 பேர்களாவர். அவருள் இம்முறை சம்மேளனத்தில் சமூகமளித்தவர்கள் 750பேராவர். இந்தியாவின் பலபாகங்களிலுமிருந்து தொண்டர்கள் சென்றிருந்தனர். இங்கே எவ்வித கூட்டங்கள் கச்சேரிகள் சொற்பொழிவுகளுங்கிடையா. சமூகமளித்தோர் யாவரும் ஒருங்கு சேர்ந்து கிராமச் சிரமைப்பு விஷயங்களைப் பற்றித் தாம் அனுட்டானத்திற் பெற்ற அனுபவங்களை வெளியிட்டு ஆலோசனை செய்தனர். மகாத்மாவின் கோட்பாடுகளையே இவர்கள் ஓம்பிக் கைக்கொள்வர். தொண்டர் தமது ஆறுதல் நோக்களை நூல் நூற்றல், வணத்தம், சமையல் செய்தல், இடங்களைத் துப்பரவு செய்தல் முதலிய அலுவல்களில் கழித்தனர். அகில இந்திய தாலிமி சங்கம், அகில இந்திய நூல் நூற்போர் சங்கம், அகில இந்திய கிராமத் தொழில் விருத்திச் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகளும் சமூகமளித்து இந்த நடபடிக்கைகளின் ஆலோசனைகளிற்பங்குபற்றினர்.

### பெரியார் வினோபா

இச்சங்கத்தின்நடுநாயகமாகவிருந்த மகாத்மாபோல் யாவர்க்கும் நற்புத்தி கூறி நல்வழிகாட்டி நின்ற பெரியார் வினோபாவே ஆவர். வணக்க காலங்களில் இவர் செய்து வந்த அரிய புத்தியுரைகள் பொன்போல் போற்றப்பட வேண்டியன. தொண்டர் மனதிற் கொண்ட ஐயங்களை இவர் இலகுவில் நீக்கினர். மனவெறுப்புங் கசப்புமடைந்தோர்க்குப்புத்துயிரும், உணர்ச்சியும், உற்சாகமும் உண்டாகும்படி செய்தனர். வினோபாஜியவர்கள் கூறிய பொன்னுரை பின்வருமாறு:- பணம்சம்பாதிப்பதனை இலக்காகக்கொண்டால் நமது நோக்கங்கள் இனிது நிறைவேற மாட்டா. உடலைக் கொண்டு தொண்டாற்றிவருவதே நாம் சமூக முன்னேற்றத்துக்குச் செய்யக்கூடிய பெரிய சேவையாகும். சேவை செய்வதைக் கௌரவமான அலுவலாக நாம் கருத வேண்டும். அப்படியாக நமது வாழ்க்கை சென்றால் நமது நாட்டின் பொருளாதார நிலை உறுதியடையும். திட்டம் வகுத்து நாம் பணியாற்ற வேண்டியதில்லை. சர்வோதய சங்கமோ ஒரு பெரிய சமுத்திரம். அதன் இலக்கும் கொள்கைகளும் நன்கு சிந்தித்துத் தேறிக் கைக்கொள்ளப்பட வேண்டியன.

### அனைவருக்கும் இடம்

இச்சங்கத்திலெல்லோருக்கும் இடமுண்டு. ஒரு பெரிய குடிகாரன் தானும் தன்னைத் திருத்திக் கொள்ள இதில் சேரலாம். ஆனால் நேர்மையைக் கைக்கொண்டு சன்மார்க்கத்தோடு கூடிய வாழ்க்கையை விரும்ப வேண்டும். வருடா வருடம் சர்வோதய சங்கத் தொண்டர்கள் கலந்து ஆலோசிப்பதால் புதிய அறிவினைப் பெறுகின்றனர். அனுபவமுதிர்ச்சியைப் பெறுகின்றனர். தாம் தொண்டுத் துறையில் கண்ட கஷ்டங்களை மேவிச் செல்ல வழியைக் காண்கின்றனர். கதர் விருத்தி, ஹரிஜன முன்னேற்றம் இச்சங்கத்தின் வேலைகளில் ஒருபாகமாகும். மேலும் நாட்டிற் பரம்பி மிக்க தீங்கினை விளைக்கும் கள்ளச் சந்தை, கைக்கூலி பெறுதல், அரசாங்கத்தைச் சூறையாடல் முதலிய தீமைகளை ஒழிக்கும் விஷயத்திலும் இச் சங்கத்தின் தொண்டர்கள் சிறிது முயற்சிகாட்டி உழைக்கவேண்டும். இந் நோக்கத்தை நிறைவேற்ற கிராமங்கள்தோறும் 'சுத்தவியவகார சங்கம்' என்ற பெயருடன் ஸ்தாபனங்கள் அமைத்து நடத்துவது நலம். எல்லாத் தொழில்முறைகளிலும் வியாபாரங்களிலும் உண்மையையும் மனத்தூய்மையையும் பொதுமக்கள் கைக்கொள்ளச் செய்வது மிகப் பிரதானமாகும்.''

அடுத்தவருடம் மாசிமாதத்தில் இச் சர்வோதய சங்க சம்மேளனம் வர்தாவுக்கு அணித்தாகவுள்ள சேவாக்கிராமத்திற் கூடுமெனத் தெரிகின்றது.


## காங்கேசன்துறையில்

திறமான ஜெர்மன் சிமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள் மற்றும் பலசாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

**நியூகோ ட்ரேடிங் கம்பனி**

காங்கேசன்துறை

தந்தி விலாசம்: "நியூகோ"; டெலிபோன் [illegible]

[4307]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திர தீபாலங்காரம்

## பக்த கோடிகள் புத்தர் தரிசனம்

## சில இந்தியப் பத்திரிகைகளின் விபரீதம்

### கொழும்பு—நிருபர் கடிதம்

24-5-51

கொழும்பு முழுவதிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் ஒரே ஜனக்கூட்டம் வெசக் தீபாலங்காரங்களைப் பார்க்க வேண்டுமானல் நடந்துசென்று பார்ப்பது தான் உத்தமம் என்பதை மோட்டார் வண்டிச் சொந்தக்காரர் நன்குணர்ந்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸார் வீதி ஒழுங்குகளைக் கவனித்தார்கள்.

ரத்மலானை, களனி, பொரளை முதலிய இடங்களில் விசித்திரமான தீபாலங்காரங்களும் அழகிய பந்தல்களும் போடப்பட்டிருந்தன. புத்தர் சரித்திரத்திலுள்ள முக்கிய சம்பவங்களை விளக்கும் சித்திரங்கள் பல காணப்பட்டன. களனிக் கோயிற் பக்கமும் போய்ப்பார்த்தேன். அப்பாடா, இவ்வளவு சனங்களும் என்ன விதமாகத்தான் கோயிலுக்குட் சென்று தரிசனை செய்யப்போகிறார்கள் என்று நினைத்தேன். ஆனல் அங்கே சனங்கள் ஒழுங்காக 'கியூ' வரிசையில் சென்று வணங்கித் திரும்பியதால் எல்லாருக்கும் பகவான் தரிசனம் கிடைத்தது. மோட்டார் வண்டியிற் சென்ற பிரபுக்கள் கால்நடையாகச் சென்றவர்களிலும் பார்க்க அதிக நேரம் சென்றே கோயிலுர்குக்கிட்ட வரக்கூடியதாயிருந்தது. கோயிலுக்குப் போவதானல் மோட்டார் வண்டி ஒரு இடையூறாக இருக்கும் என்பதைப் பலர் உணர்ந்தனர். வெசாக் விழாவின்போது பல தர்ம சாலைகள் களைத்து வரும் யாத்திரீகர்களுக்கு உணவு கொடுத்துதவினர். எங்கே சென்றாலும் சாப்பாட்டைப் பற்றிய கவலையே கிடையாது. போதியளவு சாப்பாடு கிடைத்தது. இதனல் இந்த இரண்டு நாட்களிலும் வீடு வழியே பிச்சை கேட்டுத் திரிந்த சனங்கள் மிகக் குறைவு. ஆதுலர்க்கன்னம் அளிப்பது பெரிய தருமம் அல்லவா? இதனைப் பௌத்தர்கள் பயபக்தியுடன் செய்து வருகின்றனர்.

**அமெரிக்கா செல்லும் தலைவர்**



செனேட்டர் எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் அமெரிக்க உதவிப் பணம் பெற்று இவ்வாண்டு ஜூன் மாதம் 1-ந் திகதி அமெரிக்காவுக்குப் பிரயாணமாகின்றார். தலைவர்களை அழைக்கும் பரிவர்த்தனைத் திட்டத்தின் பிரகாரம் செனேட்டர் கனகநாயகம் அவர்கள் அமெரிக்கா சென்று அங்குள்ள பலவிடங்களில் விரிவுரைகள் ஆற்றுவார்.

**சிவக் கவிமணி**

அகில இலங்கைச் சைவ இளைஞர் மகாசபையின் 12-வது வருடாந்த மகாநாட்டில் தலைமை வகித்த சிவக் கவிமணி சி. கே. சுப்பிரமணியமுதலியார் அவர்களும் அவருடைய கோஷ்டியினரும் வெள்ளிக்கிழமை காலை கொழும்புவந்து சேர்வார்கள். இவர்களை இங்கு வரவழைப்பதில் கொழும்பு விவேகானந்தசபை அதிகம் அக்கறையெடுத்துள்ளது. கொழும்பிலுள்ள சைவர்கள் இச் சைவப் பெரியாரின் அமுதமொழிகளைக் கேட்டின்புற ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

**வயது வந்தோர் கல்வி**

வயது வந்தோர் கல்வி விஷயமாக இலங்கை அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. ஐக்கிய நாடுகள் கல்வி கலாசார விஞ்ஞான சபையின் வயது வந்தோர் கல்வி நிபுணர் டக்டர் சீனிவாசராவ் இப்பொழுது இலங்கைக்கு விஜயஞ் செய்துள்ளார். இவர் மின்னேரியாவில் உள்ள அடிப்படைக் கல்வி நிலையத்தை நடத்திவரும் டக்டர் ஹாச் அவர்களுக்கு உதவி செய்வார். பூர்வாங்க ஆராய்ச்சி வேலைகள் பல நடைபெற வேண்டியிருப்பதால், இவ்விருவரும் இதில் ஈடுபட்டுழைப்பர்.

**இந்தியப் பத்திரிகைகள்**

சமீபத்தில் நடைபெற்ற தமிழ் விழாவுக்குத் தென்னிந்தியாவிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் அநேகம்பேர் வந்திருந்தனர். கல்கி, ஆனந்தவிகடன் பத்திரிகைப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். இவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, அநுராதபுரம் முதலிய பல இடங்களையும் சுற்றிப் பார்த்துத் தம் அநுபவங்களைத் தங்கள் பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள்' என் நண்பர் ஒருவர் ஆனந்தவிகடன் பிரதிநிதி எழுதிவரும் கட்டுரையைக்கொண்டுவந்து காட்டி விறுவிறுப்புடன்பேசினர். "பன்னுடையானது நல்லவற்றை விட்டுக் குப்பை கூளத்தையே தூக்கிப் பிடிப்பதுபோலவிகடனிலுள்ள கட்டுரைப் போக்கு அமைந்திருக்கிறது. ஒரு நாட்டிலுள்ளவர்களின் நற் பழக்கங்களை எடுத்துக் காட்டாமல் மிஸ் மேயோ எழுதின நூலைப்போல வம்பளப்பது நல்லதல்ல."

**'காப்பி'க் கதை**

"நம்தென்னிந்தியத்தமிழர்களின் உச்சரிப்பின் கேவலத்தை எழுதத் தொடங்கினல் ஒரு பாரதமே எழுதிவிடலாம். Coffee என்ற ஆங்கிலப் பதத்தின் சரியான உச்சரிப்பு 'காப்பி' என்று அவர்கள் கருதுகிறார்களா? கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் கல் எறியக்கூடாது என்று ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. விகடன்பிரதிநிதி அறிவார்தானே. ஆகையால் இவ்விதமான காரியங்களை விட்டு உயர்ந்த முறையில் எழுத வேண்டும்" என்று அதிகநேரம் ஆத்திரத்துடன் பேசினர் என் நண்பர். இலங்கையிலே இப்பத்திரிகைகள் அதிகம் விலையாகின்றன. விபரீதமான முறையில் அபிப்பிராயம் கூறும் பத்திரிகைகளுக்குக் கண்டனம் எழுதவேண்டுமென்று கூடச் சொன்னர். ஒரு சில இந்தியப் பத்திரிகைகள் இதைக் கவனிக்குமா?

## வானிசை

● வசந்தன் ●

**கொழும்பு வானெலி**

21-5-51

திருமதி சண்முகவல்லி

பெண்களுடைய குரல் பெரும்பாலும் கேட்க இனிமையாக இருக்கும். இவருடைய குரலும் அப்படியே அமைந்துள்ளது. ஆனல் பாடும் குரல் இன்னும் மெருகேறவேண்டும். பாடகியின் ஞானம் பரவாயில்லை. சிவானந்தம்பிள்ளை இயற்றிய 'பாடவரம்' என்ற சரஸ்வதி இராகப்பாட்டு நன்ருக இருந்தது.

22-5-51

திரு பி. கந்தசாமி

மொத்தத்தில் இவரின் கச்சேரி கேட்கச் சுகமாயிருந்தது. சிம்மேந்திர மத்யம ராக ஆலாபனை நன்ருக அமைந்திருந்தது. இந்த இராகத்தில் அமைந்த முத்துத் தாண்டவர் கீர்த்தனத்தை நேர்த்தியாகப் பாடினர். சாகித்ய நிரவல் இல்லை. சுரம் பாடுதல் இன்னும் கவர்ச்சியாக இருத்தல் வேண்டும். இவர் பாடிய பாட்டுக்கள் எல்லாவற்றையும் மிக ஆறுதலாகப் பாடினர். பாட்டுக்களின் கால அமைப்பைக் கவனித்தல் அவசியமாகும்

## பரிசு பெற்ற புலவன்

*

— கவிஞர் க. த ஞானப்பிரகாசம் —

வெண்பா

தாயினு மன்புடையன்; சான்றவன்; பாவன்மை
மேயினன்; நல்லதம்பி விண்ணுலகம்-போயினனே
தாங்குந் தமிழன்னை சார்ந்தவர்கள் சோர்ந்தலறி
யேங்கும் படிவிடுத் தின்று.

மன்னும் மரதனஞ்சல் மாகவிதைப் போட்டியிலே
துன்னும் பரிசுபெற்றுத் தோற்றுபுகழ் - என்னுங்
கரைகண்ட பண்டிதனே! கற்றவர்கள் போற்றும்
உரைகொண்டு சென்ருய் உவந்து.

மண்கலங்க வாழும் மணமக்கள் ஏங்கிமனக்
கண்கலங்க நல்ல கவிதையெனும்—பெண்கலங்கப்
பக்கத் திருந்தவொரு பான்மையெண்ணி யாங்கிருந்
தக்கதாய்ச் சென்றதென்கொல்! சாற்று.


## இலங்கைத் தமிழ் விழா மலர்

**ஈழத் தமிழ் மக்களின் பண்பாட்டை விளக்கும் அரிய கலைக் களஞ்சியம்**

இராமாயணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள இலங்கை எது? இதற்குத் தமிழ் விழா மலரிலுள்ள ஆராய்ச்சிக் கட்டுரை பதில் அளிக்கின்றது.

ஈழத் தமிழர் பெருமை, ஈழ நாட்டில் இந்தியச் சிற்பங்களின் வளம், இலங்கை அரசியலிலே தமிழரின் பங்கு, தமிழ்ப் பெண்களின் பண்புள்ளம், மட்டக்களப்புத் தமிழகம், யாழ்ப்பாணத்தின் சரித்திரச் சுருக்கம், ஈழத்தின் பிரசித்திபெற்ற இடங்கள் போன்ற அருமையான பல கட்டுரைகள் நிறைந்த மலர்க் கதம்பம்

**சிற்ப சித்திரங்களின் புகைப் படங்களும், ஈழத்துப் பெருமக்களின் உருவப் படங்களும் அழகுற அமைந்துள்ளன.**

**கவர்ச்சி மிக்க உயர்ந்த பதிப்பு**

இலங்கையிலுள்ள தமிழ் நூல் நிலையங்களிலும், கல்லூரிகளிலும், வாசிகசாலைகளிலும், இருக்கவேண்டிய ஒரு சிறந்த வெளியீடு.

இலங்கைத் தமிழர்களின் சரித்திர வரலாறு, கலை வளர்ச்சி, அரசியற் தொண்டு ஆதியனவற்றை அறிவதற்கு இதுபோன்ற தமிழ் நூல் வேறில்லை.

**238 பக்கங்கள் :: :: 42 படங்கள்**

**இலங்கைத் தமிழ் விழா மலர் விலை ரூ. 5-00**

தபாற் செலவு சதம் 50

கிடைக்குமிடம்:

க. நவரத்தினம்,
"சாந்தி நிகேதன்," பி. ஏ. தம்பி லேன்,
யாழ்ப்பாணம் (சிலோன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930

ஈழகேசரி

சுன்னுகம், கரஹு வைகாசி ௧௩

— சாலி ஆண்டு 82 —

பேசும் தந்தி இல. 805

## சட்டவிரோதமாக வருவோர்

இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் சட்ட விரோதமாக ஒளித்துவந்து இறங்குவோர் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. இதைத்தடுக்க இந்திய அரசினரும் இலங்கையரசினரும் செய்யும் எத்தனங்களும் பாதுகாப்புக்களும் பயன்படுவதாகக் காணேம். மாதவீதம் இருநூற்றுக்கு மேலானேர் இலங்கையில் வந்திறங்குவதாக அரசாங்க அறிக்கை யொன்று கூறுகின்றது. இந்திய அரசினரின் ஒத்தாசையுடன் தான் இந்தச் சட்டவிரோதமான செயல் நடந்து வருவதாக இலங்கையரசினர் கருதியதுண்டு. இவ்வாறு எண்ணுவதற்கு எவ்வித ஆதாரமுங் கிடையாது. ஒருவேளை இதைத் தடுக்க இந்தியவரசினர் விசேஷமான நடபடிக்கைகள் கையாளாதிருக்கலாம். ஆனல் இப்பிழையான செயலுக்கு இந்தியவரசினர் உடந்தையாகவுள்ளாரென்று கருதுவதும் கூறுவதும் சிறிதும் பொருந்தா.

சட்ட விராதமான இந்த ஊழல் தாராளமாக நடந்து செல்வதற்கு இலங்கையிலுள்ள கள்ளச்சந்தை வியாபாரிகளே பிரதம காரணராவர். இதை எவரும் இலகுவில் மறுத்துவிட வியலாது. இந்தியாவிற் கிடையாத அரிய பொருள்களை இலங்கையிலிருந்து சோரமாக ஏற்றிச் செல்வோரும், இலங்கையில் அரிது பெறப்படும் பொருள்களை இந்தியாவிலிருந்து சோரமாக இறக்குமதி செய்வோரும் இலங்கைவாசிகள்தான் என்பதை யாவர் மறுப்பர்? அரசினர் எவ்வளவு பாதுகாப்புகளைக் கையாண்டும் இந்த அடாத கிருத்தியங்கள் நடந்துகொண்டே வருகின்றன. இலங்கையரசினர் புதிய சட்டங்களை இயற்றினதன்பேருக இலங்கைக்குள் இந்தியர் புகுவது மிகவும் கஷ்டமாயவிட்டது. அதனுற்றான் சோரமாக இலங்கைக்குள் வரும் இந்தியா தொகையும் பெருக்கமடைந்தது எனலாம.

ஒருவரை யொருவர் குறை கூறுவதினுல் ஒருபயனுமில்லை. இலங்கை யரசினரும இந்திய அரசினரும் ஒற்றுமையாக நடபடிக்கைகள் கையாண்டு இத்தீமையைத் தடுக்க முயன்ருல காரிய சித்தி ஏறபடாது போவதெப்படி? இச் சோரச்செயலுக்கு இடங்கொடுப்பின் இருநாட்டு அரசினரின செலவாக்குக்கும மதிப்புக்கும ஈனம வந்தெய்துவதன்றிப் பொருள் நட்டமும ஏறபடுமல்லவா? தீர்வை வரி கொடாது பொருள்களை இறக்குமதி செய்யின நட்டமடைவோர் அரசினரே! இந்தியாவில் உணவுப்பஞ்சம் பொருட்பஞ்சம என்பன அதிகரித்தமையாற்ருன் தொகையாக இந்தியர் இலங்கையை நோக்கி வருகின்றனர். அப்படி இலங்கைக்கு வரவேண்டுமாயின் சட்டப்படி உத்தரவு பெற்று இலங்கைக்குட் புகுவதே முறை. சட்டத்தை மீறுவோர்க்கு அரசினர் தண்டனை விதியாதுபோவதெப்படி?

இந்திய வரசினர் இப்போது இவ்விஷயமாக அதிக கவனஞ்செலுத்த முற்பட்டுள்ளார்; சென்னை அரசினரும் மத்திய அரசினரும் சேர்ந்து இந்த ஊழலைத் தடுக்க வேண்டிய திட்டங்கள் வகுப்பதாக அறிகின்ரேம். இந்த அடாத செயல் நடந்து கொண்டு வருவது இரு நாட்டு அரசினர்க்கும் அவமானத்தை உண்டாக்குமல்லவா? சோரப் பிரயாணிகட்கு மாத்திரமல்ல அவர்கட்கு உதவி செய்வோருக்கும் அரசினர் தண்டனை வழங்கப் போவதாக அறிகின்ரேம். மேலும் இலங்கையிலிருந்து அரசினரால் நாள் வீதம் நாடு கடத்தப் படும் சோர இந்தியப்பிரயாணிகட்குச் சிறைத்தண்டனை வழங்கப் படவேண்டு மென்ற சட்டமும் இந்தியாவில் ஏற்படும் போல் தோற்றுகின்றது. இரு நாட்டிலும் இவர்கட்குத் தண்டனை வழங்கின் இந்த அடாதசெயல் மேலும் மேலும் நிகழ்ந்து பெருகிச் செல்லக்காரணமில்லை. இந்தச் சோரவேலையில் செல்வோரைத் தடுக்க நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நிதானமாகவும் நீதியாகவுஞ் செய்ய முன்வரவேண்டும். இரு நாட்டுமக்களதும் ஒத்தாசையும் இவ்விஷயத்தில் மிகவும் பெறற் பாலது. இந்த அடாத செயல்களில் ஈடுபடுவோரை அரசினர்க்குக் காட்டிக் கொடுப்பது பொது மக்களது பிரதம கடமையாகும்.

## முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

### திருவுருவப்படத்திறப்பு விழா

"ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான அவர்களின் திருவுருவப்படத்தை இங்கு திறநது வைப்பதன்மூலம இந்நாட்டில் ஏற்பட்டுள்ள கருததுவேற்றுமைகள் அகன்றுவிடுமென்பது எனது நம்பிக்கை" யென சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தமபிரான் அவர்களின் படத்தைத் திறந்துவைத்துப் பேசும்போது குறிப்பிட்டார். இவ் விழா யாழ்பபாணம் கலாநிலைய மண்டபத்திற் சென்ற வியாழக்கிழமை (24-5-51) மாலை மிகச் சிறபபாகநடைபெற்றது. செனேட்டர் எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் தலைமைவகித்தார்.

கலாநிலைய மண்டபம் தோரணங்களாலும் மலர்மாலைகளாலும் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. அம மண்டபத்திற் சிவமணம் கமழ்ந்ததென்றே கூறவேண்டும.

ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமார முனிவர் சிறுவயதிலேயே யாழ்ப்பாணததைவிட்டகன்று தாயநாட்டிற் சைவப் பணியாற்றிவந்தார். இவர்கள் சூரியனார் கோயில் ஆதீனத்திற் சார்ந்து பயின்று வடமொழி, தென்மொழி இரண்டிலும வலலுனராய்ச சைவசித்தாந்தப் பேரறிஞராகவிளங்கி இறைவன் திருவடியடைந்தனர் என முதலியார் அவர்கள் குறிப்பிட்டார். தமக்குத் தம்பிரான் அவர்கள் சிவஞான போதம் சிற்றுரை பேருரைகளை முறையாக உபதேசித்தருளினமெ்ரனவும அவர் தெரிவித்தார். தம்பிரான் அவர்கள் சைவ சிததாந்த சாத்திரங்களைப் பரமபரைக்கிரமத்தில் உபதேசம் பெறும் பாக்கியத்தைப் பெற்றுப் பெருந்தவ முனிவராய விளங்கினர் எனவும் முதலியார் மிகக் கனிவாகக் கூறினர்.

திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும தமபிரான் சுவாமிகளைப் பற்றி அருமையாகப் பேசினர்கள 'இந்துசாதனம' ஆசிரியர் திரு. வே. திருஞானசம்பந்த அவர்கள் [illegible]

[illegible]

காங்கேசன்துறையிலுள்ள சிமேந்துத் தொழிற்சாலையில் இப்போது காரியங்கள் மிக ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் அங்கு வேலை செய்து வந்த தொழிலாளர்கள் பலர் வேலையினின்றும் நீக்கப்பட்டனர். அவர்களை விலக்கியது நீதியாகாதெனவும் அது சம்பந்தமான ஒரு விசாரணை செய்து அவர்களின் குறைகளை நிவிர்த்திசெய்யவேண்டுமென்ற அபிப்பிராயமும்ஒரு சிலரிடையே இருந்து வருகின்றது.

❀

### கொழும்பு நகரசபை

இலங்கையிலுள்ள நகர சபைகளைப் பற்றிய பேச்சே இன்று எங்கும் அடிபடுகின்றது. ஊழல்களைப் பற்றிய செய்தி ஒரு புறம்; சேவைகளைப்பற்றிய கலகலப்பு மற்றோர் புறம். இவற்றிடையே கொழும்பு நகரசபை சம்பந்தமான சங்கதிகளும் காதுகளுக்கு எட்டுகின்றன. அங்குள்ள சில அங்கத்தினரிடையே அபிப்பிராய பேதங்கள் எழுந்திருப்பதாகவும், இது காரணமாக நகரத்துக்கு முக்கியமான பல வேலைகள் தடைப்பட்டுக் கிடக்கின்றனவெனவும் தெரிகின்றது. அங்கத்தவர்களின் இழுபறி நகரவாசிகளின் கால கஷ்டமாக இருந்து வருகின்றது. இந்த அவஸ்தை எத்தனை நாட்களுக்கோ?

❀

### பிறநாட்டு நிபுணர்

இலங்கையிலே எந்தக் காரியத்தைச் செய்யத்தொடங்கினுலும் பிறநாட்டு நிபுணர்களின் ஆலோசனையையே அரசாங்கம் வேண்டிநிற்கின்றது. அதிக பணச்செலவில் அவர்களை அழைத்துப் பெரிய பதவிகளையும் வழங்கி வருகின்றது. இத்தகைய வெளிநாட்டுப் புள்ளிகளின் இறக்குமதிக்கு இனி விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப் படுமெனக் கூறுகின்றேன்.

❀

### சேர் இராமநாதன்

யாழ்ப்பாணத்திலே தமிழ்த்திருவிழா நடைபெற்றபோது சேர் பொன். இராமநாதன் அவர்களின் நூற்ருண்டு விழாவும் மிகச்சிறப்பாக நடந்தேறியது. சென்னைப் பிரதம நீதியரசர் ஸ்ரீ இராஜமன்னர் தலைமை வகித்து அரிய விரிவுரை ஆற்றினர்.

இராமநாதனின் பெருமை பற்றிச் சித்தாந்தம் என்ற சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு குறிப்பிடுவதாவது: "இராமநாதனுரைப் பற்றிச் சைவ சித்தாந்த சமாஜத்தார்கள் மிகப் பெருமைப்பட வேண்டும். 1906ல் சிதம்பரத்தில் நடைபெற்ற முதல் சமாஜக் கூட்டத்திற்கு அப்பெரியாரே தலைமை வகித்தார்கள். ஆகவே, அன்னரே சமாஜத்தின் முதற்றலைவர் என்றும், அன்னரே அதனைத் தொடக்கியவர் என்றும் கூறவேண்டும் மீண்டும் ஒருமுறை சென்னையில் நடந்த கூட்டத்தில் தலைமை வகித்திருக்கிறார்கள்."

❀

### அருமைத்தமிழ்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடான தமிழ்ப் பொழில் யாழ்ப்பாணத்துத் தமிழ் விழாவைப் பற்றிப் பெருமையாகக் கூறியுள்ளது அதில் ஒருபகுதி வருமாறு: "திருவிழாவிற்குச் சென்றிருந்த பெருமக்களுக்கு வேண்டும் வசதிகள் ஏதொரு குறையுமின்றிச் செய்துகொடுக்கப் பட்டன. இந்தியா இலங்கை இருநாடுகளிலும் உள்ள தமிழ் மக்கள் தம் அருமைத் தமிழ் மொழியின் மேம்பாட்டில் கருத்துக்கொண்டு கொண்டாடிய இத் திருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சி, நம் அருமைத் தமிழ்மொழி நாளும் நாளும் ஓங்கி வளர்வதற்கு அறிகுறியாயிருந்தது"

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரே விபுலாநந்த அடிகளாரின் யாழ் நூல் என்ற அரும் பெரும் இசை நூலையும் வெளியிட்டு உதவினர் என்பதைத் தமிழ் மக்கள் அறிவது அவசியமாகும்.

## விஞ்ஞானத்தில் இலக்கியச் செறிவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ந்து தலையாட்டத் தொடங்கிவிட்டார்.

இங்ஙனம் பல நகைச்சுவை பொருந்திய கதைகளையும், தமிழிலக்கியங்களிலுள்ள 'கோவலன் மாதவி கோபம்' 'மண்டோதரி புலம்பல்' ஆகிய சம்பவங்களையும எடுததுக் கூறி 'அடிப்படை மனம்' என்பதைச் சபையோருக்கு இனிது விளக்கவைததார். அவருடைய பேச்சு இலக்கியச்சுவை செறிந்ததாயும் நகைச்சுவை நிரம்பியதாயும், இருந்தது. விஞ்ஞான விஷயத்தை இவ்வளவு இனிமையாகப் பேசினுரானல், இலக்கியம் பேசுவாரானல் எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும்.

தமிழிலே உள்ள பொருளிலக்கணம் ஒரு உளததத்துவ நூல் எனறு சிலர் கூறுகின்றனர். திரு. க. ச. அருணந்தி அவர்கள பொருளிலக்கணத்திலேயுள்ள 'நடுகைநாட்டம்' என்னும் துறையை அடிப்படை மனத்தோடு வைத்து விளக்கினர்.

மக்களும் விஞ்ஞானமும் என்னும பொருளபற்றி இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் வ. டபிளயூ. மயில வாகனம் அவர்கள் அடுக்கப் பேசுவார் என எதிர்பார்க்கப் பெற்றது. ஆனல் அவரின் பேச்சைப் பண்டிதர் சரவணமுத்து அவர்கள் (திருகோணமலைப் பிரதிநிதி) வாசித்தார்கள். இங்கிலாநதின் காற்சலங்கையாகக் கிலுங்குகின்ற இலங்கையிலுள்ள பட்டதாரிகளும் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும், தாயமொழியிற் பேசவோ எழுதவோ வேண்டிய அவசியத்தை இன்னும் உணர்ந்து கொள்ளாதது பெரிதும் கவலைப்படவேண்டிய தொன்று. சிலர் அந்தக் காலத்தைப்போல் இன்னும் தாய்மொழி தெரியாததை ஒரு பெருமையாக நினைப்பார்களேயானல் அவர்களைப்பற்றி நாம் என்ன நினைக்கலாம்.

பேராசிரியர் மயில்வாகனம் அவர்களின் விஞ்ஞானத்திறமை இலங்கை பெருமைப் படக் கூடியதொன்று. அவர் இந்திய விஞ்ஞானிகள் போலச் சிறிது பிரயாசப்படுவாரேயானல், அது தமிழரும் பெருமைப்படக்கூடிய தொன்ருகும். தமிழர் என்னும் பொழுது அகில உலகத்தமிழரையுமே குறிப்பிடுகிறேன். இங்கிலிஸின் காற்சலங்கையாகத் தமிழ் கிலுங்காதென்பது இந்தத் தமிழ்விழாவைக் கொண்டாவது, அறிந்துகொள்ளாவிடின் நாமென்செய்யலாம்.

### விழா ஓர் உரைகல்

யாழ்ப்பாணத்திலே தமிழ் விழா என்று கதை ஆரம்பமான காலத்தில் நமது நண்பர் ஒருவர், "யாழ்ப்பாணத்துப் பேச்சாளர்களுக்கும் இந்தியப் பேச்சாளர்களுக்கும் ஓர் உரைகல்போலத் தமிழ்விழா மேடை அமையப்போகிறது. யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சுத்திறமையை இந்தியர் நேரே காணப்போகின்றனர்." என்று கூறினர். "அண்ணை கொஞ்சம் வாயை மூடிக்கொள்; நீ நாவலர் காலத்தைப் பிலை இன்னும் இருக்கிறுய்; அந்தக்காலமெல்லாம் மலையேறிவிட்டது. தமிழ் நாட்டிலே, தமிழ்ப் பத்திரிகைகளுக்குச் சிறு கதை முதல் விஞ்ஞானக் கட்டுரை ஈறாக எழுதுபவர்கள் அனைவரும் ஆங்கிலம் படித்த பட்டதாரிகள். அங்கே ஆங்கிலம் படித்த வித்துவப பெரியோர்கள் என்றிருக்கிறவர்கள் எல்லோரும, தமிழிலே எழுதினுல், பேசினல் தான் சமூகத்தால் மதிக்கப்படுகிறர்கள். இங்கே தமிழிலே எழுதுகிறவர்களும் பேசுகிறவர்களும் ஆங்கிலமே தெரியாத பண்டிதர்களும் ஆசிரியர்களும் தாம். உலகத்திலே மிகப் பெருந்தொகையினரால் ஆங்கில மொழி பேசப்படுகின்றது.

"ஆங்கிலமுந் தமிழும் தெரிந்தவர்களுக்கும், தனியே தமிழ் மட்டும தெரிந்தவர்களுக்கும வித்தியாசம் இல்லாமலாய்ப்போய் விடும்? தனியே தமிழிலே ஆராய்ச்சி செய்து, தமிழின் நுட்பங்கள் எல்லாவற்றையும், ஆங்கிலததைக் கருவியாகக் கொண்டு அளவாது கூறும் ஒரு சில தனித்தமிழ்ப் பண்டிதர்கள் இங்கும் இருக்கிறார்கள்; தமிழ்நாட்டிலும் இருக்கிறார்கள்" என்று நான ஒரு பிரசங்கம் அவருக்குச் செய்தேன்.

[தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

● புதிய பொதுத் தேர்தலின் பேருகப் புதிய சகாப்தம் இந்தியாவில் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# பாரதத்திற் புதியசகாப்தம்

## வருடக்கடைசியிற் பொதுத்தேர்தல்

புதிய அரசியல் அமைப்புப்படி இந்தியாவிற் பொதுத் தேர்தல் நடத்த அரசினர் முடிவு செய்துள்ளனர். இவ்வருடக் கடைசியில் இது நடைபெறும்.

முதன் முதலாகச் சர்வ சன வாக்குரிமை அனுட்டானத்துக்குவருகின்றது. பதினெட்டுக் கோடி மக்கள் தேர்தலிற்பங்கு பற்றுவார்கள். இவர்களுள் நாலரைக் கோடி வாக்காளர் பெண்களாவர். வாக்காளரில் பெரும் பான்மையோர் ஏழைக் கிராம வாசிகளே. எனவே அரசியலேத்தமதுஎண்ணப்படி அமைக்கும் உரிமையை அவர்கள் முதன் முறையாகப் பெறுகின்றனர். மத்திய அரசாங்கத்தினை நடத்தும் பாராளுமன்றத்துக்கு 493 அங்கத்தவர்கள் தெரியப்படுவர். மற்றைய மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் உள்ள சட்டசபைகட்கு 3477 அங்கத்தவர் தெரிவுசெய்யப்படுவராம். அந்தமான் நிக்கபார் முதலிய தீவ கற்பங்களும் இந்தியாவின் அரசியலில் அடங்குகின்றமையால் அங்கிருந்தும் அங்கத்தவர்கள் இந்திய பாராளு மன்றத்திற்குத் தெரியப்படுவர். புதிய பொதுத் தேர்தலின் பேருகப் புதிய சகாப்தம் இந்தியாவில்ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### கட்சிகள்

தேர்தலே நோக்காகக் கொண்டு இப்போது பல கட்சிகள் தோன்ற ஆரம்பித்து விட்டன. காங்கிரஸ் ஆட்சியிற் பல ஊழல்கள் ஏற்பட்டு விட்டனவாகவும்அவற்றைமுற்றாக மாற்றி அமைக்க வேண்டுமென்று பலர் ஆர்ப்பாட்டஞ் செய்கின்றனர். காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற கிரிபளானி, அகமதகிட்வாய் ஆகிய இருவரும் சனநாயக முன்னணிக் கட்சியெனப் புதிய கட்சி யொன்றை அமைத்துள்ளார். காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்களை இக் கட்சியிற் சேர்க்க முயல்கின்றனர். இதைவிட சோஷலிஸ்ட்கட்சி என்றபெயருடன் இன்னென்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் தலைமையில் ஆரவாரஞ் செய்கின்றது. இக கட்சியினரும் தமது ஆதிக்கத்தை நாட்ட இதுவே சமயமெனப் பிரமாத முயற்சிகள் செய்கின்றனர். இவைகட்கு மேலாக மிக்க கூக்குரலிடுபவர்கள் கம்யூனிஸ்டுக்களாவர். இக் கட்சிகளெல்லாம் உருப்பட்டு மிக்க ஆதிக்கமடையும் என்பது சந்தேகந்தான். அரிய தியாகஞ் செய்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த காங்கிரஸ் கட்சியினரே வெற்றி பெறுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

### காஷ்மீர்

காஷ்மீரைப்பற்றிய பிணக்கு வரவர மிக்க மோசமான நிலையை அடைந்துவருகிறது. இந்தியா மீது பழிசுமத்தித் தமது பக்கத்துக்கு வெற்றியை நாட்டலாமெனப் பாகிஸ்தான் அரசினர் அரும் பாடுபடுகின்றனர். 'காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் சேர்ந்திருக்க விரும்பவில்லை. தமக்குப் பூரண சுதந்தரத்தை நாடுகின்றனர்' என்ற ஒரு பேச்சினையும் கிளப்பினர். இதனைக் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா மிக உக்கிரமாகக் கண்டித்தனர். காஷ்மீர் சமஸ்தானம் காஷ்மீர் மக்கள் எண்ணப்படியே ஆளப்படுமாயினும் இந்தியாவின் பாதுகாப்பினை எப்போதும் வேண்டி நிற்கும். இந்தியா காஷ்மீர் மக்களுக்குச் செய்த உதவியைக் காஷ்மீர் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். அத்துடன் பாகிஸ்தான் சமய சம்பந்தமான அரசியலை மேற்கொண்ட நாடு. வகுப்புத்துவேஷத்தை மேற்கொள்ளுந் தேசம். எனவே வகுப்புவாதத்தையும் வேற்றுமையையும் நாடாத காஷ்மீர் மக்களுக்குப் பாகிஸ்தான் நட்பு ஒருபோதும்பொருந்தாது. எல்லாச் சாதியினருக்கும் சமயிகட்கும் ஒப்பத் துவேஷமும் வேற்றுமையுமின்றி அரசியலே மேற்கொள்ளும் இந்தியாவினை ஒருபோதும் காஷ்மீர் மக்கள் விடமாட்டாரென்றார்.

### புதிய சட்டம்

இப்போது இந்தியத் தேசாளுமன்றத்திற் புதிய சட்டமொன்று பிரேரிக்கப்பட்டு வாதிக்கப்படுகின்றது. அரசாங்கத்துக்கு எதிராக நியாயம் நீதி தவறி எழுதும்

**இந்தியா**

பத்திரிகைகளையும் சொற்பொழிவு செய்யும் பேச்சாளரையும் இந்தச் சட்டம் மிகவும் பாதிக்குமென்று அநேக சட்சித்தலைவர்கள் இச்சட்டத்தை மிக விறைப்பாகக் கண்டித்து எதிர்க்கின்றனர். இச்சட்டத்தினால் இந்தியா அரிது போராடிப் பெற்ற பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரமென்பன பறிமுதலாகி விடுமெனப் பலர் கருதினர். பிரிட்டிஷார் ஆட்சிப்போது இச்சுதந்திரங்களை இழந்திருந்த இந்தியர், சுதந்திரமடைந்த பின்னர் அதனைத் தாராளமாகப் பெற்றனர். இப்போது புதிய சட்டத்தினை இயற்றி இச்சுதந்திரத்தைப் பறிமுதல் செய்வது எவ்வளவு கொடுமையாகுமென்றும் இச்சட்டம் மிக்க விரோதமானதென அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகளும் எடுத்துக் காட்டுகின்றன. இந்தியப் பாராளுமன்றத்து அங்கத்தவர்களும் இதைக்கண்டு கிலேசமடைகின்றனர். எனவே பண்டிதர் நேரு அவர்கள் இக் கொடிய சட்டத்தை இயற்ருது கைவிடுவதே உசிதம். எழுத்துச் சுதந்திரமும் பேச்சுச் சுதந்திரமும் இல்லாவிடின் பெற்ற சுதந்திரத்தால் பயன் யாது?

---

## இதய ஊற்று

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டு விட்டது. இப் பொழுது ஆலயம் இருந்த இடத்தின் ஒரு பகுதி இருக்கிறது. இந்த இடத்தையே எல்லோரும் வணங்கிச் செல்லுகின்றனர் என்று லலிதா விளக்கினுள்.

இருவரும் கோணேசரை வணங்கிக் கொண்டு, ஒரு மலைக்குகைக்கூடாக நுழைந்து சென்றனர். லலிதா முன்னே செல்ல மகாதேவன் பின்னே சென்ருன். அவர்கள் சென்ற இடம் ஓர் ஒதுக்கமான இடம். அந்த இடத்திற்குச் செல்ல, அவர்கள் நுழைந்து போன குகை வழி ஒன்றுதான் இருந்தது. இருபக்கமும் கடலாகவும், மற்ற இருபக்கமும் மலைச் சிகரமாகவும் இருந்தன. அங்கே சந்திரோதயம் மிக அழகாகத் தெரிந்தது. தங்கத் தகடுபோலப் படிப்படியாகக் கடலிலிருந்து சந்திரன் வெளிப்படுவது மிக அழகாக இருந்தது. அந்த அழகான காட்சியை லலிதா மகாதேவனுக்குக் காட்டினுள்.

இவைகள் ஒன்றிலும் மகாதேவன் மனம் ஈடுபடவில்லை. தருமன் பொறியில் தான் அகப்பட்டுக் கொண்டேனே, என்று ஏங்கினுன். லலிதா அவனை அங்கேயிருக்குமாறு பணித்து விட்டுத் தான்சிறிது நேரத்தால் வருவதாகக் கூறிச் சென்ருள். மகாதேவனின் விழிகள் மேலும் பெருத்தன. அவன் இருக்குமிடத்திற்கு யாராவது வந்தால் ஓடி மறைந்துகொள்ள வேறுபாதையுமில்லை. பற்றைகளுமில்லை. யாரும் தன்னைப் பிடிக்கவந்தால கடலுள் குதித்து இறந்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டான். இந்தத் தீர்மானத்தின் பின சிறிது துணிவு அவனுக்கு ஏற்பட்டது. தனது சால்வையைக் கல்லின்மேல் விரித்துக் கொண்டு படுத்தான்.

வருவாள்; வருவாள் என்று அவன பார்த்துக் கண்கள் பூத்துப் போயின. அதிக நேரமாகியும் அவள் வரவில்லை. அவன் அப்படியே கிடந்து அயர்ந்து போனுன்.

எங்கோ தூரத்திலே கத்திய ஒரு தேவாங்கின் சத்தத்திற்கு அவன் கண் விழித்தான். நிலவு மேலே வந்து விட்டது. தான் படுத்திருக்கிற இடம் ஞாபகத்திற்கு வரவே சுற்று முற்றும் பார்த்தான். இனி, எங்கே வரப்போகிருள்; என் கதி என்ன? என்று ஆலோசித்தான்.

'மல்லிகைப் பூ வாசனை தூரத்திலிருந்து வீசியது. தான் இருக்கும் இடம் கோணேசர் மலைக்கு அருகில் இருக்கிறபடியால், தேவர்கள் அர்த்த ஜாமத்தில் பூமியில் இறங்கிச் சுவாமியைப் பூசை செய்வது வழக்கம் என்ற கதை உண்மையாயிருக்கலாம். இந்த வாசனை கோயிலிலிருந்து தான் வருகிறதுபோலும். நாமும் போய் வணங்கினுல், இப்பொறியிலிருந்து தப்பவும் வழி [illegible] டும்' என்று நினைத்தான்.

— தொடரும்

---

# இலங்கையிற் சமயக் கல்வி

## 'ஈழகேசரி'க்குச் சிவக்கவிமணி செய்தி

யாழ்ப்பாணத்திற் சென்ற வாரம் நடைபெற்ற அகில இலங்கைச் சைவ மகாநாட்டுக்குத் தலைமைதாங்கிய கோயமுத்தூர் சிவக்கவிமணி ஸி. கே. சுப்பிரமணியமுதலியார் பி. ஏ. அவர்கள் ஈழகேசரி மூலம் பின்வரும் செய்தியை விடுத்துள்ளார்கள் :

இலங்கையிற் சமயத் துறையிற் கல்விபயிற்ற அரசாங்கஉரிமைஇருப்பதை யறிந்து மகிழ்கின்றேன். இது மிக்க மகிழ்ச்சிக்குரியசெய்தியாகும். எங்கள் நாட்டில் இந்த உரிமை இல்லை.

சமய பாடங்களுக்கு இங்கு ஒரு பாடத்திட்டம் இருப்பதும், அதனை மக்கள் ஏற்றிருப்பதும் நற்கால அறிகுறியாகும்.

கிறிஸ்தவர்களாயினுஞ்சரி, முஸ்லிம்களாயினுஞ்சரி, இந்துக்களாயினுஞ்சரி அவர்கள் பேசும்மொழியானது சமயத்தோடு சார்ந்திருக்கவேண்டும்.

கிறிஸ்தவர்களாயினென் வேறு எந்தச் சமயத்தராயினென், அவர்கள் தமிழைத் தமது மொழியாகக் கொண்டால் அது அவர்களின் இறைவனோடு சார்ந்திருக்க வேண்டும்.

அமெரிக்கா கடந்த யுத்தத்தில் அணுக்குண்டைப் பிரயோகித்தபோது பாப்பாண்டவர் அச்செய்கையைக் கண்டித்ததை இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

அரசியல்வாதிகளால் மக்களிடையே பிரிவுகள் உண்டாகின்றன. இவை சமயத்துக்கும் மக்களுக்கும் ஆபத்தானவை. ஹரிஜனர்கள் ஆலயங்களுக்குட் செல்வதை நான் எதிர்ப்பவனல்ல. ஆனுல் பிரமாணம் இடங்கொடுக்கின்ற மட்டிலேதான் அவர்கள் செல்லலாம்.

கோயில்களில் இறைவனின் பேரால் உயிர்ப் பலியிடுவது எனக்குச் சம்மதமல்ல.

சைவாலய சீர்திருத்தச் சபையினர் வெளியிட்டுள்ள அறிக்கையை எரிக்கவேண்டுமெனத் தீர்மானங்கள் நிறைவேற்றுவது பயித்தியகாரத்தனமாகும். சைவசமயத்தின் மீது இது துவேஷத்தை உண்டாக்கிவிடும். தவிர அந்த அருமையான அறிக்கையில் வேதாகம சைவ சித்தாந்தம் சம்பந்தமான விஷயங்கள் பலவுள. அவற்றை எரிப்பது சைவ நீதியாகாதே

---

## விஞ்ஞானத்தில் இலக்கியச் செறிவு

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

### நடேசபிள்ளை இனிமை

திங்கட்கிழமை மாலை 3 மணிக்குச் சரித்திரப்பகுதி விழா ஆரம்பமாயது. திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமைவகித்தார்கள். தமிழர்களின் சரித்திரத்தை இலங்கைச் சரித்திரமூலந்தான் நிச்சயிக்கமுடிந்தது என்று அவர் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினுர். இதை இலங்கை மந்திரிகள் அறிவார்களோ என்று நண்பர் ஒருவர் கேட்டார். அவர் தமிழரின் பண்டைய நாகரீகங்களையும், பெருமைகளையும் கூறியபொழுது, பழைமையிற் பெருமைபடையும் யாழ்ப்பாணத்தவர்களின் மார்பு இன்னும் அகன்றிருக்கும். தமிழறிஞர் சு. நடேசபிள்ளை அவர்கள் ஆற்றொழுக்குப்போல இனிமையாகப் பேசி முடித்ததும் அலையோசை கேட்டது. அந்த ஓசை இன்னும் கேட்டுக்கொண்டே இருக்கிறது. இது கல்கி ஆசிரியரின் அலையோசைக் கதையோவென நீங்கள் நினைக்கக்கூடும். அவர் கதையில் அலையோசை கேட்டது. பன்மொழிப்புலவர் டி. பி. மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ்ப்பண்பாட்டின் வளர்ச்சி என்னும் விஷயமாகப் பேசிய பேச்சு அலையோசைபோலஎடுப்பாகவும்உறுதியாகவும்அமைந்து அனைவரையுங் கவர்ந்தது.

பேராசிரியர் டி. பி. மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களைச் சில இலங்கைப் பத்திரிகைகள் ருசிய ஜனநாயகக் கட்சி என்று எழுதினவாம். "எனக்கு ருசிய ஜனநாயகத்தைப்பற்றி ஒன்றுந் தெரியாது. நான் காந்தியின் சனநாயகதத்துவத்தைக் கைக்கொண்டவன்" என்று அவர் சொல்லிக் கொழும்புத் தமிழ்த்தினசரி ஒன்றின் (வீரகேசரி அல்ல) தலைதத்தத்துக்கு நல்ல சாட்டைபோட்டார்.

சைவத் திருவாளர் இராமச்சந்திரன் செட்டியாரின் பேச்சு சுவைமிக்கது. நாட்டாண்மைக்காரன் நீதி செலுத்தின கதை, விஜயன கதை, என்று பல கதைகளை, இது மாத்திரமல்ல; இதுமாத்திரமல்ல; என்று எடுத்து அடுக்கடுக்காகக் கூறிச் சபையோரை மகிழவைத்தார்.

இஸ்லாமியரும் தமிழும் என்னும் பொருள்பற்றி திரு. எஸ். எம். கமால்தின் அவர்கள் பேச எழுந்த நின்றபொழுது 'சிறு பையனுயிருக்கிருரே; இவர் என்ன பேசப் போகிருர்' என்று நினைத்தேன். அவரைக் காணுமல் அவர் பேச்சைமட்டும் கேட்டோர்; 'அனுபவம் மிகுந்த தமிழ் முறையாகப் பாடங் கேட்ட, ஒரு அறிஞர் என்று கூறினர். என்னைப் பொறுத்த வரையில் அவர் நாவலர் வழி வழி வந்தவர்களிடம் தமிழ் படித்தவர்போலத்தோன்றினுர்.


தமிழுக்கு நாங்கள் என்ன செய்தோம்; முஸ்லீம்களிடமிருந்துதான் நாம் தமிழை ஆதியில் கற்றுக்கொண்டோமோ? என்ற அவர் பேச்சு எங்களை நினைக்கச் செய்தது. முஸ்லீம்களின் தாய்ப்பாஷை அரபித்தமிழ் என்று சொல்லும் சரித்திர விற்பன்னர்களைத் தயவு செய்து திரு. எஸ். எம். கமால்தீன் அவர்களுடன் சிறிது சம்பாஷிக்குமாறு கேட்கிறேன். பொதுமக்கள் இலக்கியமென விளங்கும் மாரியம்மன் தாலாட்டுத் தொடக்கம், சீறுப்புராணம் ஈறாக இயற்றிய இஸ்லாமியப் புலவர்களின் பெயரையும் அவரிடம் அறிந்துகொள்ளவும்.

### முஸ்லீம் தமிழ்ப்பற்று

திரு. கமால்தீன அவர்களுடைய இனியபேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இன்னுமொரு பெரிய அதிசயம் நடந்தது. தமிழ்விழாவுக்காக வந்திருந்த மக்களின் தொகை கங்குகரையின்றிப் பெருகலாயிற்று. அன்று இரவுநடக்கும் பாவைக்கூத்து ஜனக்கூட்டத்தைக் கண்டதும் எனக்கு ஞாபகம் வந்தது. நாங்கள் பாவைக்கூத்து

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**பழமொழி விளக்கக் கதைகள்**— இருபாகங்கள்: ஆசிரியர்: திரு. க. இனியன்; பிரசுரம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை 1; விலை: ரூ 1-8 0.

தமிழிலே பழமொழிகள் இருப்பன போன்று ஏனைய நாடுகளிலும் பழமொழிகள் தொன்று தொட்டு வழங்கி வருவன. மக்களின் பழக்க வழக்கங்களையும், ஒழுக்கங்களையும் பழமொழிகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. இப் பழமொழிகளை விளக்குமுகத்தாற் பல கதைகள் வெளியாகியுள்ளன. இந்நூற்கண் காணப்படும் கதைகள் அகத்தின் அழகு முகத்தில் தெரியும், அடாது செய்பவர் படாது படுவர், அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி போன்ற 66 பழமொழிகளின் உள்ளுறைகளை விளக்கிக் காட்டுகின்றன. இந்நூல் மாணவர்களுக்கு நற்பயன் அளிக்கக் கூடியது.

•

**புத்தர் சரித்திரம்**: ஆசிரியர்: நாரதமகாதேரர்; மொழி பெயர்ப்பு; பிக்கு சோமானந்த- விலை ரூபா 1-0-0. விலாசம்: மகாபோதி ஆச்சிரமம், சென்னை 11;

புத்தர் தமது வரலாற்றைத் தாமே கூறும் முறையில் இது எழுதப் பட்டுள்ளது. இது திரிபிடகத்திலிருந்து திரட்டி எடுக்கப் பட்டது இதனை நாரததேரர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதினர். பிக்கு சோமானந்த தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

சாக்கிய முனி 2494 வருடங்களுக்கு முன்னர் முக்தியடைந்தார். அப்போது அவருக்கு 80 வயது. 29 வருட காலம் இல்லறத்தில் ஈடுபட்டுள்ளார். ஆறு ஆண்டுகள் துறவறம் பூண்டு கடுந்தவம் செய்தார். எனவே இவர் தமது 35 வயதிற் புத்த பதவியை அடைந்தார். அதின் பின்னர் 45 வருடங்கள் குருவாக விளங்கிப் போதித்து வந்தார். ஆசிய சோதியாக விளங்கிய கௌதம புத்தரின் வரலாறு இந்நூலிற் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

•

**என்ன ருசியோ!** ஆசிரியர், நீலம்; (உதவி ஆசிரியர்: 'சுதேச மித்திரன்') பிரசுரம்: ஸ்ரீ வெங்கடரமணு கம்பெனி திருவல்லிக்கேணி, சென்னை 5; விலை: ரூ. 1 0-0.

நாகரிகத்தின் பெயரால் எத்தனையோ விசித்திரங்கள் மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் புகுந்து கொண்டன. 'கலை கலை' என்று கூறி எத்தனையோ கொலைகள் நடைபெறுகின்றன. இவைபோன்ற பல விஷயங்களையெல்லாம் ஒரு தனியான கோணத்திலிருந்து ஆசிரியர் நீலம் தமது கட்டுரைகளில் எழுதியுள்ளார்.


பிரஞ்சிந்தியா
பெனிபிட் பண்டின்
மொத்தம்
பிரைஸ் தொகை
ரூ. 50,000/=
டிக்கெட் ஒன்றுக்கு ரூ. 1.
விற்பனை ஏஜண்டுகளுக்குத் தாராளமான கமிஷனும், போனஸ் பிரைஸ்களும் உண்டு.
விபரங்களுக்கு:—
The French India
Benefit Fund,
Post Box No. 20.
No. 3, Virasami Naicker Street,
KARIKAL Fr. INDIA.
[4311—ii]



இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி இல. 91, ஹோட்டன்பிளேஸ், கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[4289


# சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பான்மையும் அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும் நமது பண்பாட்டின் மற்றொரு சிறப்பியல்பிற்குக் காரணமாயின. இதனை tolerance என்ற ஆங்கிலச் சொல்லாற் சிறப்பாகக் குறிப்பிடல் சாலும். தமிழகத்தின் அக்கால அரசியலமைப்பு முடிமன்னர் மூவரையும், குறுநில மன்னர் பலரையும் கொண்டது. இப்பேரரசரும், சிற்றரசரும் பிரிந்திருந்தாராயினும் அவர் அனைவரும் 'தமிழகம்' என்னும் தனி நாட்டைச் சார்ந்தவராய்த் தமிழக ஒருமைப் பாட்டையும், ஒற்றுமையையும் காப்பாற்றி வந்தனர். இத் தமிழ் நாட்டு ஒற்றுமையும், வேற்று நாட்டுத் தொடர்பும் நன்கு இயைந்து இயங்கிவந்ததன் பயனாகவே தமிழர் பிறரையும் பிற உயிர்களையும் தமவே போற் பேணி வருதற்குத் துணை செய்தது. நம தொகை நூல்கள் பல்வேறு சமயக் கோட்பாடுகளையும், அரசியல் தத்துவக் கொள்கைகளையும், தம்முள் முரண்படும் பழக்க வழக்கங்களையும் காட்டுவன. இச் செய்யுட்களை இயற்றியவர் இருபாலாருமாவர்; வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டவர் ஆவர்; வேறு வேறான வாழ்க்கை நிலையிலுள்ளவருமாவர். இவர்களுள் அரசருமுளர். அலுவலாளருமுளர்; புரவலரும் உளர்; இரவலருமுளர்; இப் புலவர் இருக்கூட்டத்தினுள், கூடல், உறையூர், கருவூர் முதலான தலை நகரங்களில் வாழ்ந்தவருமுளர்; அரிசில், ஆலங்குடி முதலாக வெள்ளூர் வேம்பற்றூர் ஈறாக உள்ள சிற்றூர்களில் திகழ்ந்தவருமுளர்.

இன்று "tolerance" என்னும் பண்பினுக்குச் சான்றாக இலண்டன்மா நகரிலிருக்கும் Hyde Park cornerஇல் பல்வேறு அரசியல் வகுப்பினர், சமயப் பிரிவினர், கொள்கை வேறுபாட்டினர் ஆகிய கூட்டத்தவரின் சொற்பொழிவாளர் தத்தம் கருத்துக்களைத் தடையின்றி வெளியிடுவதையும் மக்கள் கேட்பதையும் சுட்டிக் காட்டுவர். 1800 – ஆண்டுகட்கு முன் காஞ்சியில் தமிழ் நாட்டுச் சமயவாதிகள் தத்தம் கொடிகளை நிறுவித் தத்தம் சமயங்களைப் பரப்பும் முறையைக் கண்டால், இக்கால மக்கள் என்ன கூறுவர்? தமிழ் நாட்டுச் சமய வரலாறு நம் மக்களின் ஒப்பற்ற பெருந்தன்மைக்குச் சான்றாய் விளங்குகின்றது. இப்பெருந் தன்மைக்கு ஓர் அணியாகவே போலும் நம் இலக்கியத்திற் பற்பல சமயங்களின் நூல்கள் அமைந்துள்ளன. இலத்தீன் மொழி மேல்நாட்டுச் சமயங்களின் மொழியாய் விளங்கி வந்தது. சம்ஸ்கிருதத்தில் இந்தியாவின் சமயங்களைப் பற்றிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் தமிழிலக்கியத்திற் சிறந்து விளங்கும் சமய இலக்கியங்களைப்போல் வேறெம்மொழியிலும் இல்லை. சைவரும், வைணவரும், புத்தரும், சமணரும், மகம்மதியரும், கத்தோலிக்கரும், [illegible] தம் [illegible] உரிமை பாராட்டக்கூடிய ஒரு மொழி உண்டெனின், அம்மொழி தமிழ் மொழியேயாம். ஆதலால், பெரிய புராணம், இராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சீறாப் புராணம், தேம்பாவணி, இரட்சணிய யாத்ரீகம் போன்ற நூல்களுக்கு ஒப்பாகச் சொல்லக் கூடிய பல்வேறு சமயங்களுக்குரிய நூல்கள் வேறு எந்த ஒரு மொழியின் இலக்கியத் தொகுதியிலு மில்லையென்று துணிந்து கூறலாம்.

## பக்தித் தமிழ்

இவ்வாறே, பக்தியிற் கனிந்த செய்யுட்கள், தமிழில் அரும்பி மலர்ந்தது போல வேறெம் மொழியிலும் மலரவில்லை. அளவிலும், சுவையிலும், தமிழிலுள்ள திருப்பாடல்கள் போலப் பிற இலக்கியங்களில் இல்லை. எனவே, மொழிநூல் முறையில் எத்துணை வழுவுடையதாயிருப்பினும், ஆங்கிலம் வாணிகத்தின் மொழியென்றும், இலத்தீன சட்டத்தின் மொழியென்றும், கிரேக்கம் இசையின் மொழியென்றும் ஜெர்மன தத்துவத்தின் மொழியென்றும், பிரெஞ்சு தூதின் மொழியென்றும், இத்தாலியம் காதலின் மொழியென்றும் கூறுவது ஒருவாறு பொருந்துமாயின், தமிழ் இரக்கத்தின் மொழி அல்லது பக்தியின் மொழி என்று கூறலாம். தமிழில் இரங்குவதுபோல வேறெம் மொழியில் இரங்குவது அரிது; தமிழில் இரப்பதுபோல வேறெம் மொழியில் இரப்பதுவும் அரிது. எனவே, பரிபாடல், தேவாரம், திருவாசகம்நாலாயிரதிவ்யப் பிரபந்தம், திருப்புகழ், திருவருட்பா பனுவல்கள் தமிழிலக்கியத்தில் இடம் பெற்றமை இயல்பேயாம். சங்க இலக்கியத்தின் அகத்துறைத் தொகுதிகளிலும் தமிழரின் முழுமுதற் கடவுள் வழிபாட்டாற் பொங்கி யெழுந்த அன்பிற்குச் சான்றுகளுண்டு. தமிழரின் தன்மையைக் காட்டுவதற்கு கல்லையும் கரைக்கும் இப் பரிபாடல் அடிகளே சாலும்:

"யாம் இரப்பவை
பொருளும் பொன்னும்
போகமுமல்ல நின்பால்
அருளு மன்பு மறனு
மூன்றும்"

மேலும், தமிழருடைய நீதி நூல் தொகுதிகளும், நீதி மொழிகளும், நீதிக் கருத்துகளும் சங்க இலக்கியத்தைப் பயின்று வருபவரின் கருத்தைக் கவர்கின்றன. தமிழ் நாட்டு மலை மிளகும், சந்தனமும், பிற செல்வங்களும் தந்தது. தமிழ் நாட்டுக் கடல் முத்தையும் பவளத்தையும் அளித்தது. தமிழ் நாட்டுக் காடு யானைக் கொம்பையும், தேக்கு மரத்தையும் வழங்கியது. தமிழ் நாட்டுச் சுரங்கம் பொன்னையும், வெள்ளியையும் மணியையும் கொடுத்தது. ஆதலால், தமிழன் திசைகளெங்கும் சென்று தமிழ் நாட்டின் பெருமையை நிலை நாட்டினன். சீரியா, மெசபொத்தேமியா, எகிப்து, சீனம் முதலிய நாடுகள் தமிழ் நாட்டுப் பொருட்களைப் பெற்றுச் சிறந்து விளங்கின. இதுடன், தமிழன் போரில் ஈடுபட்டுத் தன் வீரத்தையும் வளர்த்து வந்தான். போரும், தூதும், வணிகமும் விளங்கும் ஒரு நாட்டில் நீதியும் ஒருங்கே விளங்கும். நேர்மை, நடு நிலைமை, உண்மை, வீரம் போன்ற நல்லியல்புகள் போரிலும் வாணிகத்திலும் தலைசிறந்து நிற்பது இயல்பு. இரக்கமும் அன்பும், செல்வமும் வீரமும் உடையவர் பால் சுரக்கும் இரு பண்புகளாம். எனவே நீதி நூற்கள் நம் இலக்கியத்தின் ஒரு பெரும் பகுதியாய் விளங்குவதற்குத் தமிழ் மக்களின் வாழ்க்கை அமைப்பு முறையே காரணமாயிருந்தது என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

"நாடா கொன்றோ, காடா
கொன்றோ
அவலா கொன்றோ, மிசையா
கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை! வாழிய
நிலனே" — எனத் தன்னிடத்து வாழ்வோரியல் பல்லது தனக்கென ஓரியல்புடையதன்றென நிலத்தை இழித்துக் கூறுவது போல உலகத்தியற்கை கூறிய அழகைப் பாருங்கள். இன்னும் அரசன் ஒருவனது செங்கோன்மை அல்லது கொடுங்கோன்மை, அவன் நாடு செழிப்பு, நீர்வளம், நிலவளம், உடைமை அல்லது இன்மையிற் கண்டு தெளியப் பெறும் என்னும் உண்மை சங்கத் தமிழ் நூல்களிற் கூறப்பட்டுள்ளதுபோல் வேறெம் மொழியிலும் இல்லை. பத்துப் பாட்டு, பதிற்றுப் பத்து, புறநானூறு முதலான நூல்களில் இக்கருத்தைப் பல இடங்களிற் பரக்கக் காண்க. மன்னனைப் புகழ்வதென்பது அவன் நாடு, மலை, ஆறு ஆகியவற்றின் வளத்தையும் வனப்பு மிகுதியையும் கூறுவதாகவே கொள்ளப்பட்டது. இளந்திரையனது நாட்டைப் புகழும் புலவர்:

"அவன் கடிபுடை வியன்புலம்
உருமும் உரறாது; அரவும்
தப்பா
காட்டு மாவும் உறுகண் செய்யா, வேட்டாங்கு
அசைவழி யசை இ நசைவு
ழித் தங்கிச் சென்மோ'
—என்று கூறுகின்றார்.

'ஆறலை கள்வர் அங்கு இரார்;
இடியோசையும் எழாதங்கே;
பாம்பும் தீங்கற்றதாம்;
காட்டு விலங்குகளும் துன்பம்
செய்யா"

என்று துணிவுடன் கூறவேண்டுமானால், அரசனது செங்கோன்மையின் சிறப்பில் அக்கால மக்களுக்கிருந்த நம்பிக்கையின் அளவு புலனாகின்றதன்றோ?

நீதி நூல் தொகைகளைத் தவிர மற்றும் பிற இலக்கியங்களிலும் தமிழனின் நீதி நெறி முறைகளும் அன்புடைமையும் காணப்படுகின்றன. அகப் பொருட்டுறைச் செய்யுட்களேயாயினும் இயற்கையழகை எடுத்துக் கூறும் பொழுது தமிழ்ப் புலவர் நீதியையே அடிப்படைக் கருத்தாகக் காட்டத் தவறார். மலர்கள் நறுமணங் கமழுதற்கும், ஆற்றிடை நீர் தெளிவுற்றிருப்பதற்கும் இன்னும் இவைபோன்ற இயற்கை நலங்களெல்லாம் சிறப்பதற்கும் மன்னன் செங்கோன்மையே காரணம் என்பர் சங்க நூற் புலவர் பெருமக்கள்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத நண்பர்

— சொக்கன் —

## கடிதம் I

3-3-42.

இராசா,

வாழ்க!

பக்கத்துப் பக்கத்து வீடுகளிலே இருந்துகொண்டு கடிதமூலம் சம்பாஷிக்க நேர்ந்ததையிட்டு வருந்துகின்றேன். என்ன செய்வது? உன்னைக் காணும்பொழுது ஏற்படும் உள்ளக் கிளர்ச்சி என்னை மௌனியாக ஆக்கிவிடுகிறதே!

நேற்றைய நிகழ்ச்சியின் பின் உன்னைப் பார்க்க நேரும் சந்தர்ப்பங்களிற் கண்களில் கண்ணீருடனும், உதட்டில் துடிப்புடனும், எல்லை மீறிய உள்ள உணர்ச்சியுடனும் மரக்கட்டையாக ஆகிவிடுகிறேன்.

ஒரு பயங்கரமான உண்மையைச் சொல்கிறேன். உள்ளத்தைத் திடப்படுத்திக்கொண்டு கேள். நேற்றிலிருந்து உன் செயல்களில் மட்டுமன்றி, உன்னிலுங்கூட வெறுப்பு உண்டாகிறதடா? மலைக்கிறாயா?

என் பாசத்திலே ஒரு குழப்பத்தை உண்டாக்கி, என் உள்ளத்திலே ஒரு பெரும் அடியை அடித்து, என் அன்பிலே ஒரு கறையை உண்டாக்கிவிட்டு, உன் செயல் முடிந்து விட்டது.

எட்டாத கனவுக் கோட்டைகளின் மேல், என்னை மென்ற சிறகு விரித்துப் பறந்து சென்றேன். உலகத்தில் என்னைவிடப் பாக்கியசாலி யார் என்னும் கர்வத்தோடு பறந்து சென்றேன்.

ஆனால்......?

என் சிறகுகள் சரியான சமயத்தில் முறிந்து விழுந்துவிட்டன. உதிரம் வடியப் பெற்ற உள்ளத்தோடு, எட்ட முடியாத பாதலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். கீழே — கீழே — இன்னும் கீழே — ஐயோ! — இதற்கு முடிவே இல்லையோ! நான் அதல பாதலத்தில் விழுந்துதான் ஆகவேண்டுமா?

உன் அன்பு என்ற வெள்ளத்திலே மூழ்கி ஆனந்த வெறியாட்டயர்ந்த எனக்கு அது வெறும் கனவு என்ற எண்ணம் உண்டாகிவிட்டது!

அன்பா, அன்பா, அன்பா! என்னை மன்னிப்பாயாக! என்னை மன்னிப்பாயாக! என் தலையைத் தாழ்த்தி மளவுக்குத் தாழ்த்தி, என் கண்களில் கண்ணீரை, ஆறாகஓடச் செய்து, என் கைகளால் உனது பாதங்களை இறுகப் பற்றிக்கொண்டு வேண்டுகிறேன். என் உள்ளத்தில் எழும் எண்ணங்களுக்காக என்னை மன்னிப்பாயாக! என்னுடைய சொற்களிற் பைத்திய வாடை வீசுவதாகத் தென்பட்டாலும், என் வார்த்தையில் ஆற்றாமை எதிரொலிப்பதாகத் தோற்றினாலும், என்னை மன்னிப்பாயாக?

ஏன் தெரியுமா?

என் உள்ளம் நொருங்கி விட்டது; என் நம்பிக்கையை இருள் மூடிக்கொண்டு விட்டது; என்ன செய்வதென்றே தெரியவில்லை.

உன் கையில் மதுக் கிண்ணத்தையும்; உன் கண்ணில் வெறிச் சிவப்பையும், உன் நடையில் தள்ளாட்டத்தையும், நேற்றுக் கண்டதன் பின்,—பல நாட்களின் பின், கண்டதன்பின்—என்ன செய்வது? என்ன சொல்வது? என்ன கருதுவது?

இந்தப் பிரச்சினையை நீயே தீர்ப்பாயாக! உன் உள்ளத்தில் தடுமாற்றம் இல்லாவிட்டால், இன்னும் உன் உறுதியில் உனக்கு நம்பிக்கை இருக்குமானால் சற்றுப் பின் சென்றுபார். சிந்திக்கச் சிந்தனையும், முடிவுக்கு வர மனச்சாட்சியும் உனக்கு இருக்குமானால் உன்பிரதிக்ஞைபற்றிச் சற்றுக் கருதுவாயாக!

ஒரு காலத்தில் உலகை நீ வெறுத்தாய்; உலகமும் உன்னை வெறுத்தது; இகழ்ந்தது; பரிகசித்தது. 'குடிகாரன்' என்று கொக்கரித்தது.

வீதி யோரம், குடித்துவிட்டு விழுந்துகிடந்த நாட்களை எண்ணிப்பார். மோட்டார்களுடனும், சைக்கில்களுடனும், முத்தமிட நேர்ந்த சந்தர்ப்பங்களை நினைத்துப்பார்.

உழைத்தாய்; ஆனால் உன் உழைப்பு உனக்குப் பயன் தரவில்லை; செல்வத்தில் பிறந்தாய்; ஆனால், கோட்டை வீடு கைமாறக், குச்சு வீட்டில் வாழ்ந்தாய்.

எதனால்—?

உனக்கே பதில் தெரியும். வறுமைப் பிசாசின் வீட்டுக் கதவை இடித்துத் தூங்கும் அதனைத் தட்டி எழுப்ப, குடிகாரனுக்கல்லாது, வேறு யாருக்குத் துணிவு வரும்? மான அவமானங்கள் மரத்துப் போன உள்ளத்தோடு, பணத்தைக் காற்றில் ஊதிவிட்டு வேடிக்கை பார்க்கும் சக்தி வேறு யாருக்கு உண்டு?

ஆம்! குடிதான் உன்னைப் பாழ் செய்தது. குடிதான் உன்னை ஆண்டியாக்கியது; குடிதான் உன் சமூக அந்தஸ்தைக் குறைத்தது! இவையெல்லாம் உனக்கே தெரிந்தவை. அன்பா,

என் நட்பு வர்த்தக ரீதியானதல்ல. என் அன்பு ஒப்பந்த அன்பல்ல. சகோதரத்து, மனதுக்கினிய தோழரற்று, நான் அன்புக்காக உலகெல்லாம் கை யேந்தி நின்றபொழுது என் கைகளை நிரப்பிய பெருமை உன்னையும், நடராஜனையுமே சாரும்?

இவையெல்லாம் நேற்றுவரை என் மனதில் இருந்த எண்ணங்கள்; நம்பிக்கைகள். இன்று அந்த நம்பிக்கைகள் ஊறுபெற்று விட்டன என்று ஆழ்ந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். என் நம்பிக்கை எவ்வாறு பறிபோயிற்று? என் நம்பிக்கையில் ஊனம் ஏற்பட்டது எதனால்?

உன் பிரதிக்ஞையிலிருந்து நீ தவறியதால்; பிரதிக்ஞையை நீ வெறும் ஐந்தெழுத்துச் சொல் என்று கருதி நடந்து கொண்டதால்.

உனக்கு இது வியப்பாயிருக்கலாம். ஏன்? பைத்தியக்காரத்தனமாயுங் கூட இருக்கலாம். இவன் என்ன, நவீன நீலகண்டனோ என்று கூட நீ எள்ளி நகையாடலாம்.

ஆனால்,

எவன் என் இருதயத்தின் ஒவ்வோரணுவிலும் நீக்கமற நிறைந்திருக்கிறானென்று கருதினேனோ, எவன் என் சொல்லைத் தேவவாக்காகக் கொண்டு நடப்பானென்று கர்வமடைந்தேனோ அவன்,—இராசா— ஓர் உன்னதமான பிரதிக்ஞையிலிருந்து தவறுவானென்று, அதுவும் தன் அன்பின் மீது ஆணையிட்டுக் கூறிய பிரதிக்ஞையிலிருந்து தவறுவானென்று, என்னாற் கனவு கூடக் காண முடியவில்லையே!

ஆனால் அது நடந்து விட்டது; நினைக்கவும், கருதவுங் கூடாத பயங்கர விஷயம் நடந்து விட்டது. ஐயோ! நான் ஏன் இன்னும் உயிருடனிருக்கவேண்டும்! இறந்து தொலைந்து போகேனோ? அடா கர்மமே!

மங்கிய விளக் கொளியில் நீர் மல்கும் விழிகளுடன், என் கையைப் பிடித்துக் கொண்டு, "என் அன்பின் மீது ஆணையாகச் சொல்கிறேன். இனிக் குடிக்கமாட்டேன் இதை உறுதியாய் நம்பு" என்று நீ செய்து தந்த பிரதிக்ஞை இப்படியா அகால மரண மெய்தவேண்டும்? பிரதிக்ஞை என்பது வெறும் குடிகாரன் பேச்சா? அது விடிந்தால் போச்சா? பிரதிக்ஞையென்பது வெறும் ஐந்தெழுத்துச் சொல்தானா?

இவையெல்லாம் கேள்விகள். இவை உனது, பயங்கர மௌனத்தில் சங்கமியாதிருக்கவேண்டும். எவ்வெவற்றைச் சொல்லவேண்டுமோ அவ்வவற்றையெல்லாம் ஒளிவு மறைவின்றிச் சொல். என் உள்ளத்திற்குச் சாந்திகொடு.

அவமானச் சின்னங்களால் மூடுண்டு, வறுமையை வரவேற்று அதனுடன் கூடிக் குலாவி, மன்பதை யாவும் எள்ளி நகையாடப் போகும் இடமெல்லாம், குடிகாரனெனக் கட்டியங் கூறப்பட்டுவாழ்வெல்லாம் கண்ணீர்விட உன்னை நீ தயார் செய்துகொண்டாயா? இதுதான் உன் முடிவோ?

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நான் சகித்திருக்க வேண்டுமா? உன்வழியிற்றான் நீ செல்லப்போகிறாயா? பதில் வேண்டும்.

என் வெறுப்பின் மீது உனது குடியுலகைப் படைக்க விரும்பின் படை; குடி; தெருவில் விழுந்துகிட; பிரதிக்ஞைகள் செய்து செய்து, அவற்றை மீறிநட.

ஆனால்,உன் அன்பன் உன்னை விட்டு வெகுதூரம் விலகிச் சென்று விடுவானென்பது உறுதி.

உன் தீர்ப்பு யாது? சிந்தித்து விரைவில் கூறு. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக இருக்கும், உனது பதில் வரும்வரை.

கடிதம் நீண்டதற்கு எனது உணர்ச்சிகளே காரணமாகும். ஒரு வேளை சொன்னதைச் சொன்னதையே திரும்பத் திரும்ப எழுதியிருக்கிறேனோ, என்னவோ! அப்படியாயின, அது உனக்கு ஒரு சலிப்பு நிறைந்த விஷயமாய்த்தான் இருக்கும்! என்னசெய்வது? பொறுமையுடன் வாசி.

பதில் வேண்டும்.

அழகன்

### பொதுக் குறிப்பு

அழகன் ஓர் உணர்ச்சி ஊற்று. கனவுலகிற் சிஞ்சப [illegible] வாழ்வில் அதிர்ஷ்டசாலி; தனிப்பிள்ளை. அதனால் தன் சகோதர பாசத்தை ஈடுசெய்ய, இராசா வென்பவனையும் நடராஜனென்பவனையும் துணைக் கொண்டான்.

நடராஜன் உண்மையிலேயே தன்னை அழகனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டான். அநாதபத்தில் தொடங்கி, முதிர்ந்த அன்பினாவிவிட்டான் அவன். அழகன் எள்ளென்றால் எண்ணெயென்று நிற்பான் அவன்.

இராசாவின் உள்ளம் ஒரு தணிந்த எரிமலை. அது இடைக்கிடை தன் சுபாவத்தைக் காட்டிப் பின் அடங்கிவிடும். அதை அழகனால் உணரமுடியவில்லை. அதனால் அவர்களிடைப் பல போராட்டங்கள், உணர்ச்சிக் கிளர்வுகள் உண்டாயின. நடராஜன் அவர்களை அடிக்கடி சமரசம் செய்துவைப்பான்.

அழகனுடைய அன்புக்கு இராசாவின் அன்பு குறைந்ததல்ல. ஆயினும் அவனுடைய உள்ளம் பெலவீனமானது. குடிகாரன்! ஸ்திரிலோலன். அவன் எவ்வாறிருப்பான்? அதற்கு அழகனே உதாரணம்!

அழகன் அவனைத் தன் அன்பினாற் சிறிது சிறிதாக மாற்றிவந்தான்.

குடியால்கெட்டவன் இராசா. அவனை அதை உணரச் செய்ய அழகன் பட்ட கஷ்டம் பல.

முடிவில் இராசா தன் அன்பின்மீது ஆணையிட்டுக் குடிப்பதில்லை எனப் பிரதிக்ஞை செய்தான். ஆனால்......? சில நாட்கள்தான் அது நிலைபெற்றது; பின் இரகசியமாகக் குடிக்கத் தொடங்கினான்.

ஒருநாள் கையுங் களவுமாக அழகனிடம் பிடிபட்டுவிட்டான். அழகனுக்கு எப்படியிருக்கும்! அவன் தான் உணர்ச்சிக் குவியலாயிற்றே! தன் உணர்ச்சிகளை யெல்லாம் கொட்டி அவன் எழுதிய கடிதமே, முன்னர் தரப்பட்டது.

அதில் கெஞ்சல், பயமுறுத்தல், ஆற்றாமை, ஏமாற்றம் ஆகியாம் உணர்ச்சிகள் போரிடவில்லையா?

ஆசிரியர்.

## கடிதம் II

4-3-42

சகோதர,

வணக்கம்.

கடிதம் பெற்றேன். நீண்ட கடிதம்! ஆனால் சலிப்புத் தரவில்லை. அதற்குக் கொடுக்கப்பட்ட உணர்ச்சியென்ற மெருகுதான் காரணமோ?

உணர்ச்சியுரால் உந்தப்படும் போதும் வார்த்தைகள் அலங்காரமாகத்தான் இருக்கின்றன! ஆனால் அது என்னால் முடிந்ததல்லவே.

நான் பிரதிக்ஞையிலிருந்து தவறியது உண்மையே! ஏன்? நான் மனிதனாய் இருப்பதே அதற்குக் காரணம்!

நீ மனிதனில் அமரனைச் சிருட்டிக்கக் கனவு காண்கிறாய். ஆனால் நானோ இன்னும் பரிபூரண மனிதனாகக் கூட ஆகவில்லையே! என்ன செய்ய! ஒரு காலத்து உன் முயற்சி என் வரையில் வெற்றியடையலாம்; வெற்றி யடையும்; ஆனால் இன்றல்ல.

பிரதிக்ஞையிலிருந்து இனியுந் தவற மாட்டேனென்று சொல்வதற்கில்லை; சொல்லுந் துணிவுமில்லை. அத் துணிவை என் வரையில் ஏற்படுத்த முயல்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

காந்தியின் உறுதி தளர்ந்ததுமுண்டு; கௌசிகன் பிடிவாதம் பிழை போனதும் உண்டு. இது என் செயலுக்குச் சமாதானமாகச் சொல்லப்படுவதன்று. ஆனால் இவர்களுடன் ஒப்பிடப்படும் பொழுது நான் பெலவீனங்களாற் சிருட்டிக்கப்பட்ட மனிதன் தானே!

உன் கடிதம் என் உள்ளத்தை உருக்கியதும் உண்மை; பயமுறுத்தியதும் உண்மை; நம்பிக்கையை அளித்ததும் உண்மையே!

என் அன்பிற் கறையில்லாதவரை, என் அன்பிற் பொய்மை நுழையாதவரை, நீ என்னிலிருந்து விலகிச் செல்ல முடியாது. பிரதிக்ஞை வேறு; அன்பு வேறு. இதை நீ உணர வேண்டும்.

ஆரம்பத்திலேயே உன்னைச் சகோதரனென்றே விளித்திருக்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா ,34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும், பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.


உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை எங்கூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[4290]



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




**அருமையான மருமக்களே!**

வணக்கம். சிலந்திப் பூச்சியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது பின்னும் வலையானது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். இந்த வலையை அது பின்னுவதில் மிகுந்த முயற்சி எடுக்கின்றது. எவ்வளவு கஷ்டமேற்பட்டாலும் சிலந்தி தனது வலையைப் பின்னி முடித்துவிடும். இதன் ஊக்கமானது மனிதர்களாகிய எமக்கு ஒரு முன்மாதிரியாகும்.

சிலந்தி வகையிற் பெரிய இனத்தைச் சேர்ந்த சிலந்தியும் இருக்கின்றது. இதன் நீளம் ஏறக்குறைய எட்டு அங்குலம்வரை இருக்கும். குழந்தைகள் இதனைப் பார்த்தால் பயந்துவிடுவார்கள். இது, பூமிக்குள்ளேதான் வசித்துவருகின்றது. பூச்சிகளை மாத்திரம் இது உண்பதில்லை. சிறு பறவைகளும் இதற்கு இரையாகிவிடுகின்றன.



பிள்ளைகளே! சிலந்தியைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த கதை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்.

கேசரி மாமா

இலக்கியச் செல்வம் 7.

# திருக்குறள்

கே. எஸ். கிருஷ்ணன்

செந்தமிழ் மொழிக்கு உறுதியையும் இலக்கியத்திற்குப் பெருமையையும் என்றுமுள்ள தன்மையையும் அளித்துள்ள நூல் திருக்குறள். மனிதவர்க்கு எத்துணைப் பெருமையுடைத்து என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நூல் விளங்குகிறது.

இந்நூலைச் செய்த பெரியார் திருவள்ளுவர் என்ற பேரறிஞர். அவர் இற்றைக்கு ஏறக்குறைய 20 நூற்றாண்டுகளுக்குமுன் தமிழன்னையின் தவப்புதல்வராகத் தோன்றி, தமிழன்னை பெரிதுவக்கும் வண்ணம் சான்றோனென வாழ்ந்து, உலக முழுவதையும் உய்விக்கும்பொருட்டு இவ்வரியநூலைச் செய்தார். இந்நூல் உலகப் பொதுநூல். உலகத்தவர் போற்றிப் பாராட்டும் நூல். பல்வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதப்பட்ட தனிப் பெருந் தமிழ் நூல்.

இலக்கியத் தொகுதியைப் பொதுவாக அறிவையூட்டும் நோக்கமுள்ள இலக்கியமென்றும், இன்பமளிக்கும் நோக்கமுள்ள இலக்கியமென்றும் இரண்டு பிரிவாகப் பிரிப்பது வழக்கம். திருக்குறள் அறிவை யூட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தாலும், உவமைத் திறன், நகைச்சுவை, சொல்லணி, பொருள் நயம் இவைகள் இந்நூலில் நிறைந்திருத்தலால் இன்பத்தையும் பயக்க வல்லதாகத் திகழ்கின்றது.

இந்நூல் அறம் பொருளின்பம் ஆகிய உறுதிப்பொருள்களை விளக்கும் முறையாலே முப்பானூல் என்ற பெருமையையும், அறிவையூட்டும் ஆற்றலாலே உத்தரவேதம் என்ற பெயரையும், என்றும் நிலைத்திருக்கும் உண்மைகளைப் போதிக்கும் பெற்றியாலே பொய்யாமொழி என்ற பொருள்சேர் புகழையும் பெற்றுளது.

தமிழ்மறையென்று போற்றப்படும் திருக்குறளுடைய உயர் பெரு நலனையுணர்ந்தோரே தமிழறிந்தோராவர். பண்டிதரும் பாமரரும் பேச்சுவழக்கிலும், எழுத்து வழக்கிலும் வள்ளுவர் சொல்லை யாண்டு வருகிறார்கள். பேரிலக்கியங்களாகிய ஐம்பெருங் காப்பியங்களும், கச்சியப்பரும், கம்பரும், சேக்கிழாரும், வில்லிபுத்தூராரும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் திருவள்ளுவரை மறக்கவில்லை. பழந்தமிழ் வாணரிற் பலர் திருவள்ளுவருடைய தெய்வப் புலமையை வியந்து அவருக்குப் பாமாலை சூட்டியுள்ளனர். அப்பாமாலையில பரணர் பாடிய வெண்பா சிறந்த கருத்தைக் கொண்டதாக இருக்கின்றது:-

மாலுங் குறளாய் வளர்ந்து
இரண்டு மாணடியால்
ஞாலமுழு தளந்தான் —
வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண்
பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாம்அளந்தார்
ஓர்ந்து'

'வையத்தார் உள்ளுவ வெல்லாம் வள்ளுவர் ஓர்ந்து அளந்தார்' என்று பரணர் பாராட்டுகிறார். மக்களுடைய மனதில் தோன்றவல்ல உயரிய எண்ணங்களையெல்லாம் தேர்ந்தெடுத்து இந்நூலில் தந்துள்ளார் என்பது பெறப்படுகிறது.

**புதிய மருமக்கள்**

மே.496. இ. அப்புத்துரை, வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

மே.497. கே. சாமித்தம்பி, ஆர். கே. எம். பாடசாலை, மண்டூர்.

மே.498. க. ஆன்டன், சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

## மாமா பதில்

மே.484 கு. மங்கையர்க்கரசி உமது கட்டுரையைப் படித்து மகிழ்ச்சியுற்றேன். முன்னரே இப்பகுதியில் நீர் எழுதியது போன்ற பல கட்டுரைகள் வெளியாகிவிட்டன. தயவு கூர்ந்து உமது ஊராகிய பங்களூரைப் பற்றிச் சுருக்கமான ஒரு கட்டுரை எழுதியனுப்பவும்.

மே.267 ந. சிவபாதம் கட்டுரை கிடைத்தது. முன்னர் நீர் அனுப்பிய கட்டுரை உமக்குக் கிடைத்திருக்குமென நம்புகின்றேன். பாலர் பகுதியில் உமக்கு மிகுந்த ஆர்வம் இருக்கின்றதை நான் அறிவேன். அதைவரையும் உற்சாகப்படுத்தி வருகின்றேன்.

மே.488 ம. பத்மாவதி: கமத்தொழில் அபிவிருத்தியில் உமக்குள்ள அக்கறையைக் கண்டு நான் ஆனந்தமடைகின்றேன். கட்டுரை கிடைத்தது.

மே.403 ம. த. லோறன்ஸ் மருமகனே, உமது மகிழ்ச்சி எனது மகிழ்ச்சியாகும். ஆம், திருத்தங்களைக் கவனிக்கவும். ஈழகேசரி பாலர்பகுதியில் நீர் மிகுந்த ஊக்கம் எடுத்து வருகின்றீர். கட்டுரையுங் கடிதமும் பெற்றேன்.

மே.346 அ. ந. கிருஷ்ணசுவாமி: மருமகனே வேறு ஏதும் சுவையான கட்டுரை எழுதி அனுப்பவும். உமது ஊரைப்பற்றி அழகாக எழுதலாமல்லவா?

மே.378 க. சிவசுப்பிரமணியம்: உமது கதை கிடைத்தது. நல்ல கட்டுரைகளும் எழுதிப் பழகவேண்டும்.

மே.476 அ. பெரியசுவாமி மருமகனே இனிமையான வேறு கட்டுரை அல்லது கதை எழுதி அனுப்பவும். சுருக்கமாக அழகான எழுத்துக்களில் எழுதவும்.

மே.444 ப. தங்கரத்தினம் உமது கட்டுரையை மிகச்சுருக்கமாக எழுதியிருக்கின்றனர்.

மே.429 கு. பத்மாவதி மருமகளே, புழுக்கொடியல் இப்போது கைவசம் இல்லை!

மே.19 டே. குணரத்தினம்: நாட்டு வணக்கம் கிடைத்தது. படித்துப் பார்த்தேன். ஆல்தான கவிஞர் பற்றிய கட்டுரையை வெளியிடுவேன்.

## தாய் சொன்ன புத்தி

மே.444 ப. தங்கரத்தினம்

நான் சில ஆண்டுகட்கு முன்னர் மிகச் சிறுமியாய் இருந்தேன். அப்பொழுது எனக்கு விளையாட்டிலே தான் மிகவும் விருப்பம். என் தாயாரோ அதை முற்றிலும் கண்டித்துச் சில பல புத்திமதிகளைப் புகட்டி வந்தாள். அது எனக்கு மனக்கஷ்டமாகவே இருந்தது.

பாடசாலைக்கு ஒழுங்காகச் செல். நல்லொழுக்கமும் நன்னடத்தையுமுள்ளவளாக இரு. படிப்பில் கவனமாக இரு என்று எவ்வளவோ புத்திமதி புகட்டியும் நான் அவைகளைச் சற்றேனும் கவனித்து நடக்கவில்லை. அவற்றை இன்று பொன்மொழிகளாக நான் கருதுகின்றேன்.

ஏனெனில் என்னுடன் கலாசாலையிற் கல்வி கற்கும் மாணவர்கள் எவ்வளவோ திறமையும் சிந்தனையோட்டமுள்ளவர்களாகத் திகழ்கின்றனர். ஆதலினாலே நாமெல்லோரும் தாய் தந்தையாரின் சொற்படி கேட்டு நடந்து பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து விளங்குவோமாக.

## நல்லுரை

சிற்சபேசன்

பருத்தி நட்டுப் பஞ்சைப் பெறுநீ
நூலை நூற்றுச் சீலை நெசவு செய்
உணவுப் பொருளெலா முண்டு பண்ணுநீ
காலையும் மாலையும் கடவுளைத் தொழுநீ
ஏழைக் கீவதை ஏற்பவ னிறையவன்.
எங்கள் நாட்டை எழில்பெற வேசெய்.
அன்னியர் பொருளை அறவே ஒழிநீ.
கொள்ளை லாபம் கொள்ளை போகும்
உளறு வாயன் ஊரைக் கெடுப்பன்.
தேச சேவையே தேக பலாபலன்.
ஆன்றோர் வாக்கெல் லார்க்கு மருமறை

## கண்டதில்லை

மே.9 வேத தணிகாசலம்.

அமரகவி பாரதியார் ஈழத்துத் தமிழகத் திருநெல்வேலியில் நடைபெற்ற விழாவினைத் தரிசித்திருப்பின், "யாமறிந்த விழாக்களிலே தமிழ்விழாப் போல் இதமுடைய தெங்குங் காணோம்" என்று நிச்சயமாகப் பாடியிருப்பார்.

மூன்று தினங்களாக, வெயில் வேக வைத்தாலும் சரி, மழை பொழிந்தாலுஞ்சரி, பகைவர் தாம் பயமுறுத்தினாலுஞ் சரி, தமிழ் விழாவை விட்டு வெளியேற மாட்டோம், என்று நின்ற பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்களைக் கண்டதும், எந்தத்தமிழனின் இதயமும் பூரிப்படையாது இருக்க முடியாது. விழாப்பந்தரிலே, தாயகத்துத் தமிழர்களும், சேயகத்துத் தமிழர்களும் ஒன்றித் தமிழ் அன்புக்கயிற்றாற் கட்டுண்டு களிப்படைந்த காட்சிகளைக் காணப்பெற்றோர் பெரும்பேறு பெற்றவர்களாவார்கள்.

நான்காம் தமிழ்விழா தமிழ்த்தாயின் அரிய தமிழ்மணிகள் பலரை, நமக்குக் காட்டியது. அதற்கு எவ்வளவு நன்றி செலுத்தினுந் தகும்.

இத்தமிழ் விழாவினைப் போல் என்றும் நான் கண்டதில்லை. இதைத் தரிசிக்கக் கிடைத்த பாக்கியம் ஒன்றே எனக்குப் போதியது. தமிழனாகப் பிறந்ததை இட்டு நான் பெருமையடைகின்றேன் வாழ்க தமிழ்! வாழ்க வையகம்!

**பிறந்ததின வாழ்த்துக்கள்**

•

27-5-51—2-6-51

மே.12. ஆ. கணபதிப்பிள்ளை, மே.39. ஏ. ஸி. எம். மஸூத், மே.138. சி. சேனாதிராசா, மே.288. ஐ. மனோகரன், மே.3[illegible]3. எ. தருமலிங்கம், மே.335. அ. சர்வேஸ்வரன், மே.444, சி. பவளம்.

•

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும பல்லாண்டு வாழ்வாராக.

## நாய் செய்த உதவி

மே.429 கு. பத்மாவதி

கமலநாதன் என்பவருக்கு வனஜா என்று ஒரு மகளும் மனோகரன் என்று ஒரு மகனும் இருந்தார்கள். இருவரும் தங்கள் வீட்டுக்கருகாமையிலுள்ள பாடசாலையில் போய்ப் படித்து வந்தனர்.

அவர்கள் ஜிம்மி என்ற ஒரு நாயை வளர்த்து வந்தனர். அவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது அந்த நாயையும் அழைத்துக்கொண்டு செல்வர். ஒருநாள் அவர்களுடன் பாடசாலை சென்ற நாய் காணமற் போய்விட்டது. அவர்கள் நாயைத் தேடிப் பார்த்தனர். நாயைக் காணவில்லை. அன்று தொடக்கம் அந்த நாயை அவர்கள் பாடசாலைக்கு அழைத்துப் போவதில்லை. அவர்கள் அழைத்துப் போகாததால் அது மிகவும் வருத்தத்துடன் அவர்களுடைய வீட்டில் இருந்தது. ஒருநாள் மனோகரன் பாடசாலைக்கு படப் புஸ்தகத்தைக் கொண்டுபோக மறந்துவிட்டான். ஆசிரியர் அப்புத்தகத்தைக் கொண்டுவருமாறு கேட்டார். மனோகரன் அப்புத்தகத்தைத் தேடினான், காணவில்லை. அவன் மிகவும் வருத்தத்துடன் இருக்கின்றபோது ஜிம்மி வாயில் அதனைக் கௌவிக்கொண்டு வருவதைப் பார்த்தான். மிகவும் சந்தோஷத்துடன் அவன் அந்தப் படப் புத்தகத்தை வாங்கினான். அவன் ஆசிரியரிடமிருந்து தப்பிக்கொண்டான். அன்று தொடக்கம் அந்த நாயை மிகவும் சந்தோஷத்துடன் பாடசாலைக்கு அழைத்துச் சென்று வந்தான்.

**கேசரி மாமா அவர்களுக்கு!**

வணக்கம். நான் இப்போது வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் படிக்கிறேன். எங்கள்பாலர்பகுதியில் ஓர் புதிய விஷயம் தொடங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அது என்னவென்றால், கேள்வி—பதில்என்பது. நாங்கள் அனுப்பும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் கொடுக்கவேண்டும். இதைக் கூடிய சீக்கிரத்தில் தொடங்குவீர்களென எதிர்பார்க்கின்றேன்.

இ. சந்தானகோபாலசர்மா
மே.376

வண்ணார்பண்ணை 22-5-51

## ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

..................................................

பிறந்ததிகதி: ..................................................

..................................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஈதலிற் குறைகாட்டா
தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம் போல்
தீங்கரை மரநந்தி"

என்ற பாலைக் கலிச் செய்யுட் பகுதியில் 'ஆற்றங்கரையில் மரங்கள் தழைப்பது ஈதல் முறைமையறிந்தொழுகும் தீதில்லான் செல்வம் மிகுதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது' போல் விரவி வருகின்றன இத்தகைய உவமையணிகள்.

"தனது சொல் தவறிய தலைவனது நாட்டில் இயற்கை தன் வளங் குன்றுகிருப்பது எங்ஙனம்?" என்று தலைவி தோழியிடம் குறை கூறுவதாக உள்ள பகுதிகள் அறிந்து இன்புறுதற்குரியன.

தம் புகழுரை கேட்ட சான்றோரைப் போல் தலையைச் சாய்த்து மரங்கள் அஞ்சின என்று கூறுவதன் சுவையையும் காந்தள் மலர்களைக் கைகூப்பும் கரங்களுக்கு ஒப்பிடுவதையும் வேறெந்த இலக்கியத்திற் காண்போம்.

இவ்வாறு நமது இலக்கியங்களில் எல்லாம் நீதி நெறிக் கருத்துக்கள் செறிந்திருப்பதை அறிந்த மேனாட்டாசிரியர் ஒருவர் "உண்மையில் இம்மக்களுக்கு இறைவனின் சிறப்பு அருளும் ஆசீரும் இருக்க வேண்டியது" என்று வியந்து மகிழ்ந்து கூறுகின்றார்.

சங்க இலக்கியம் கூறும் நீதியொழுக்கத்திற்கு அதனை இயற்றிய நல்லிசைப் புலவரும் அவர் போற்றும் பெரியாரும் எடுத்துக்காட்டாக நிற்கின்றனர். கபிலபரணர், காவற்பெண்டிர், பாரி, சாத்தனர், கோப்பெருஞ்சோழன் இன்னோரன்ன பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் நீதிக் குணங்களைக் குணியாகக் காட்டுவன.

நிறையும் நீதியும் நம் மக்கள்பால் நிறைந்து நிலவுதற்குக் கல்வியறிவே அடிப்படைக் காரணமாயிருந்தது. செல்வத்தையோ, செல்வரையோ தமிழர் பெரிதாய்ப் போற்றவில்லை. அவர் அறிந்து போற்றிய செல்வம் செவிச் செல்வம், போரில் வீரம், தமக்கென வாழாப் பிறர்க்குரியரெனும் பெருந்தன்மை, ஈதல் கல்வியின் பெருமையைத்தான், தமிழ் நூல்கள் எங்ஙனம் போற்றியுரைக்கின்றன!

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

வீரம், ஆண்மை, படைத்தவராயிருந்த தமிழருடைய புகழ் முரசு சங்க இலக்கியத்தின் அகப்பாட்டிலும் ஒலித்தாலும், அவ்விலக்கியத்தின் பல இடங்களில் தோன்றும் இரக்கம், ஈரம், குழந்தையின் உள்ளம் போன்ற மென்மைப் பண்புகளும் குறிக்கற்பாலன. மக்களின் வாழ்க்கையைக் கண்ணாரக் கண்டதன் பயனையும் அதனால் உண்டான கனிந்த உள்ளத்தையும் சங்க இலக்கியம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. பல செய்யுட்களைப் படிக்கும் பொழுது நமக்கு கண்ணீர் அரும்புவது அரிதன்று. Pathos-என்னும் இரேக்க மொழியால் இலக்கிய ஆராய்ச்சி ஆசிரியர் குறிப்பிடும் அவலச்சுவை நம் மொழிக்கே இயற்கையென அமைகின்றது.

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையுமுடையேம் எங்குன்
றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றுங் கொண்டார் யாம்
எந்தையும் இலமே"

எனப் பாரி மகளிர் கலங்கி மொழிவதையும், 'அளிய தாமே சிறு வெள்ளாம்பல்' என்று தொடங்கும் செய்யுளையும், 'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என்று முடியும் செய்யுளையும் இலக்கிய மன்றங்களிற் பொன்னிற் பொறித்துப் போற்றினும் மிகையாகாது.

Tenderness-ஈரமுடைமை, மென்மை, நீரன்ன சாயல் எனப்படும். இவ்வரிய பண்பு அகத்துறை இலக்கியத்தில் வரும் காதற் பாக்களில் அழகாகக் கூறப்பட்டிருக்கக் காண்கின்றோம். நக்கீரர் வண்டைப் பார்த்துக் கூறிய பாட்டு எத்துணை மென்மையுடைத்து—'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி'

முப்பது ஆண்டுகளாகக் கல்லூரி ஆசிரியராய் விளங்கிய மேல் நாட்டவர் ஒருவர் 'இந்திய இலக்கியத்தில் உயர்ந்த காதல் அல்லது பெண்மைச் சித்திரம் இல்லை' என்று கூறியுள்ளார். தமிழிலக்கியப் பகுதிகளை அறிந்திருந்தால் இவர் இங்ஙனம் கூறியிருப்பரோ? தமிழிலக்கியத்திற் காணும் காதற் பகுதியின் உயர்வைத் தமிழரே அறிந்தாரல்லர். அன்பினைந்திணை இலக்கணம் வகுத்து நிலத்துக்கு ஒழுக்கம் நிறுவி, உள்ளுறை, இறைச்சியென்ற குறிப்புப் பொருளை நயம் பெற உள்ளே புகுத்தித் தமிழரின் தலைசான்ற காதல் வாழ்க்கையைக் கூறும் இலக்கியம் யாத்த பெரியாரை, அறிவாற்றலிலும் ஒழுக்கநெறி முறைமையிலும் சிறந்த செந்தமிழ் நாவலரை யாம் எங்ஙனம் போற்ற வல்லோம்? மறையாசிரியராயிருப்போரும், ஒழுக்க, நீதி முறைகளைக் கற்பிக்கும் பொறுப்புடையோரும் சங்கத் தமிழ் இலக்கியங்களில் தம் தொண்டினுக்கேற்ற தலையாய சான்றுகளையும், குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும், வழிவகைகளையும் காண்பர். தமிழனின் இவ்வுயர்ந்த பண்பாடு உலகம் முழுவதுமே அறிவதற்காக, அறிந்து கடைப்பிடிக்கச் செய்வதற்காக, உழைப்பது தமிழரது தலையாய கடமையாகும். மேல் நாட்டவரிடையே வழக்காற்றிலிருக்கும் களவியல் ஒழுக்க முறை பிற்றை ஞான்று பிறந்த மேல்நாட்டு வழக்கமென்று பெரிதும் போற்றுவர். அன்னார், நம் அகத்துறை இலக்கியங்களை ஆராய்ந்தறிவாராயின் அகத்துறை இலக்கியங்களிலெல்லாம் உலகிலேயே ஒப்பற்று விளங்குவது தமிழிலுள்ள அகத்துறை இலக்கியமே என்றுணர்வதுறுதி.

இலக்கியம் வளர்ந்தெழுவதற்கு நிலைக்களனாக உதவும் பொருளாயிருப்பவை மக்களும் இயற்கையுமே. இவ்விரு பகுதிகளையும் பிரித்து இயற்கையின்றி மக்களைப் பற்றியும், அல்லது மக்களின்றி இயற்கையைப்பற்றியும் புலவர் பாடுவரேல் அவ்விலக்கியம் குறையுள்ள இலக்கியமாகவே விளங்கும். (There are two great subjects of poetry; the natural world and human nature. It is a terrible business for poetry when it is wholly employed on man or wholly employed on nature. — Stopford Brooke). தமிழ்ப் புலவரோ தம் புலமைத் திறமையைக் காட்டுதற்கு முதற்பொருளாக மக்களையும், துணைப் பொருளாக இயற்கையையும் கொண்டனர். இவற்றை தமிழ்ப் புலவர் கையாண்ட முறையில் வேறெம்மொழிப் புலவரும் கையாண்டிலர். தமிழரின் இயற்கை ஈடுபாட்டைப் பற்றி ஆராயுந்தோறும் எந்நாளும் புதிய கருத்துக்களையும் வியத்தகு உண்மைகளையும் கண்டு வருகின்றேன். மொழி பெயர்க்கும் வல்லவர் கூட இவ்வடிகளை வேற்று மொழியில் எவ்வாறு கூறுவர்:—

செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை
நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை
யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப

மலராயினும், இலையாயினும், மரம் செடி கொடி எதுவாயினும் தமிழர் தம் வாழ்க்கையிற் பயன்படுத்திய முறையை நுணுகி ஆராயுமிடத்து வேறெந்த மக்கட் குழுவினரும் இவ்வாறு அமைத்ததாகத் தெரியவில்லை.

பேராறுகளின் கரைகளிலே பெரிய பல நாகரிகங்கள் வளர்ந்திருக்கின்றன; நகரங்களும் வளர்ந்துள்ளன. தேம்ஸ் (Thames), ஸீன் (Seine), டைபர் (Tiber), நைல் (Nile) முதலான ஆறுகளைப் பற்றி எழுந்த செய்யுட்டொகுதியைவிட நம் தமிழக ஆறுகளாகிய வைகையைப்பற்றியும் காவிரியைப்பற்றியும் இயற்றப்பெற்ற செய்யுட்டொகை மிகுந்தது; மேலும், சிறந்தது என்றால், அது மிகைபடக் கூறியதாகாது. எட்ரியாற்றிக் கடற்கரையில் எழுந்த வெனிஸ் நகரினைப் போலவே, நம் தமிழ் மன்னரும் தமிழக மக்களும் நம் ஆறு, கடல், ஆகியவற்றை அன்புடன் பாராட்டி வந்துள்ளனர்.

இயற்கையை ஆழமாய் அறிவதுடன் மக்கள் உள்ளத்தையும் மிக்க நுண்ணறிவுடன் ஆய்ந்து உளநூலின் பயிற்சி மிக்காராய்மிளிர்கின்றனர் நம் புலவர். பெண்ணின் இயல்பை ஷேக்ஸ்பியரைத் தவிர வேறு எவரேனும் அறிவாரெனின் அவர் அறிவிலர், அற்றேல் பேரறிஞர் என்ப. பெண் உள்ளத்தை நன்கறிந்து பாடிய செய்யுட்களால் நம் சங்கப் புலவர் பேரறிஞர் என்பது துணியப்படும்.

உள்ளதை உள்ளவாறே கூறுதல் தமிழர் பண்பாட்டின் வேறொரு சிறந்த இயல்பாகும். தமிழ் நாட்டு இலக்கியத்துக்கும், இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கியத்துக்கும் உள்ள பெரியதொரு வேற்றுமை யாதெனில் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலுள்ள இலக்கியங்கள் கற்பனையில் மலிந்து வாழ்க்கையுடன் ஒட்டிய வரம்பைக் கடந்து செல்லும் இயல்புடையன. நாட்டின் சிறப்பியல்புகளைச் செய்யுளில் விரித்துக்கூறப் புகுந்த தமிழ்ப் புலவர் 'சந்தேசம்' என்னும் முறையில் பறவைகளையும், முகில்களையும் தூதுபோக்கினார் அல்லர். மக்களையே மக்களைக்கொண்டு ஆற்றுப்படுத்தும் அரும்பெரும் முறையையேபயன்படுத்தியுள்ளனர். தமிழ் நாட்டு மலைகளும் ஆறுகளும் தேவ கணங்களுடனோ இதர பிற உலகங்களுடனோ தொடர்புடையனவாகக் கூறப்பட்டிருப்பதைச் சங்க இலக்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Founder: N. PONNIAH

| Vol. 21 | Chunnakam, Sunday, May., 27, 1951 | No. 42 |
|---|---|---|

## சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்திற் காணமுடியாது. தமிழ்நாட்டு அரசரோ பிறரோ தேவ குல அவதாரங்களாகக் கூறப் பெறவுமில்லை. பழந் தமிழ்ப் புலவர் பெரும் உண்மையினர் (Realists) ஆகவே காட்சியளிக்கின்றனர் என்பது தேற்றம்.

இவ்வாறு சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகளைப் பல் வேறு முறைகளில் ஆய்ந்து செல்வதற்கு இடமுண்டு. தமிழ்த்திருநாள் கொண்டாட நாம்இங்கே கூடியிருப்பதுதமிழரின் சென்ற காலப் புகழை மீண்டும் நாம் பெறுவதற்கும் உலகில் நிலைநாட்டுவதற்குமேயாம். "மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமை யில்லை." தமிழ் நாட்டில் உண்மையான கல்வியும் உண்மையான குறிக்கோள்களும், உண்மையான கோட்பாடுகளும் நிலைநாட்டப் பெற்று விளங்கினால்தான் நம் முன்னோர் அடைந்த சிறப்பு நிலையை நாமும் அடைவோம் என்பது ஒரு தலை. வள்ளுவரை வாயாரப் புகழ்ந்தால் மட்டும் போதாது. வள்ளுவர் வகுத்த நெறியின்படி தமிழர் அனைவரும் வாழவேண்டும்.

இன்று நம் நாட்டிற்கு வேண்டியவர் யாரெனின், ஆன்றமர்ந்தடங்கிய சான்றோரான ஆராய்ச்சியாளர் பலரே. உலகின பல்வேறு நாடுகட்குச் சென்றதன் பயனாகவும், பிற மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் ஒருவாறு கற்றறிந்ததன் பயனாகவும் தமிழிலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலை, தமிழ் வரலாறு முதலியவற்றை உலகிலெவ்வளவிற்குப் பரப்ப வேண்டு மென்று சிறிது உணர்ந்துள்ளேன். வேர்ஜிலின் இனியவையும், காளிதாசனின் சாகுந்தலத்தையும் மக்கள் போற்றுவது போல், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்த் தொடர்நிலைச்செய்யுளை உலகம் போற்றுமாறு நாம செய்தல் வேண்டும். கொன்பூஸியஸ், செனக்கா ஆகிய நீதி நூலாசிரியர்களைப் போல், திருவள்ளுவரையும் உலக மாந்தர் போற்றும் நிலையை ஆக்குதல் வேண்டும். ஸாபோ, எலிஸபெத் பிரௌனிங், ஷேக்ஸ்பியர், முதலானோரின் காதற் பாக்களை மக்கள் படித்து இன்புறுவது போல் நம அகத்துறை இலக்கிய நூல்களையும் உலகினர் போற்றிக்கொண்டாடும் புதிய நாள் உதிக்க வேண்டும். Temple Classics, World Classics என்ற பெருந் தொகை நூல் திரட்டில் நம் இலக்கிய நூல்களும் இடம் பெறும் பெருமை அடைய வேண்டும். மேற்றிசை, கீழ்த் திசைப் பல்கலைக் கழகங்கள் தமிழ்க் கலைகளின் தனித் தன்மையை உணர்த்தும்படி செய்யவேண்டும். தமிழறிஞர், தமிழ் என்றால் அன்புடன் தனித்தமிழ், தேன் தமிழ், தண்டமிழ், தீந்தமிழ், வண்டமிழ், இனதமிழ், இனபதமிழ, கோதில தமிழ், தீதில தமிழ், தேனமொழியும செந்தமிழ, சஙகத தமிழ், முததமிழ எனறெல்லாம போற்றுவர். அவ் வன்பிற் பிறரும பஙகுபெற்று உலகம் பெரும வாழ்வு அடையுமாறு நாமனைவரும ஒருங்குசேர்ந்து

## சாவகச்சேரித் தேவாலயம்

### திறப்பு விழாவும் பிரார்த்தனையும்

சாவகச்சேரியில் 40,000 ரூபாய் செலவில் புதிதாய் அமைக்கப்பெற்ற தேவாலயம் அத்தியட்சகர் சபாபதி குலேந்திரன் அவர்களாற் சென்ற திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் திறந்துவைக்கப்பட்டது.

போதகர் கே. எஸ். ஜெயசிங்கம் அவர்கள் தேவாலயம் பல்லாண்டு சிறப்புடன் விளங்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார். இவ்விழாவுடன் சம்பந்தப்பட்ட திருப்பணி விழாவினை டாக்டர் சி. ஜே. எலியேசர் தம்பதிகள் திறந்து வைத்தனர்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இவ்விழாவுக்குக் கிறிஸ்த அன்பர்கள் பலர் சமூகங் கொடுத்தனர். மத்தியான விருந்து வைபவம் மிகச்சுவையாக இருந்தது.

பிற்பகல் கதம்பக்கச்சேரியும் பேசும் படக்காட்சியும், பொருள் விற்பனையும் நடந்தேறின. போதகர் எ. லி. தம்பிராசா அவர்கள் இப்போது சாவகச்சேரியிற் பணியாற்றுகின்றனர்.

## இராமக்கிருஷ்ண மிஷன் தொண்டர் சபை.

### 1951-ம் ஆண்டு கதிர்காம ஆடி உற்சவம்

கடந்த சில வருடங்களாகக் கதிகாமத்தில் டாக்ரர் அப்பாசாமி மடத்திலும், செல்லக்கதிர்காமத்திலும், இராமக்கிருஷ்ண மிஷன் கதிர்காம யாத்திரைத் தொண்டர் சபை, யாத்திரிகளுக்கு வருடாந்த ஆடித் திருவிழா நாட்களில் அன்னதானம் செய்து வந்தார்கள். அத்துடன் தெய்வானையம்மன் கோயிலடியில் தண்ணீர்ப்பந்தல் அமைப்பித்து, சர்க்கரைத் தண்ணீர், தோடம்பழச் சாறு, மோர், முதலிய பானங்களும் வழங்கிவந்தார்கள்.

இம்முறையும் திருவிழா நாட்களில் தினந்தோறும் அவ்விதம் அன்னதானம் அளிப்பதற்கும், பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு மோர், சர்க்கரைத் தண்ணீர் கொடுப்பதற்கும், வேண்டிய பண உதவி பொருளுதவி செய்ய விரும்புவோர், தங்களால் இயன்றவற்றை ஜூலை மாதம் 10-ந் திகதிக்கு முன்பதாக,

என். நவரத்தினம், இராமக்கிருஷ்ண மிஷன், 44-ம் லேன், வெள்ளவத்தை,

கா. கனகரத்தினம், பிறக்டர், 11, வில்சன் தெரு, கோட்டடி, கொழும்பு, ஆகிய இருவரில் ஒருவருக்கு அனுப்பிவைத்தால் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த வருடம் கதிர்காமத்தில் ஜூலை மாதம் 4-ந்திகதி புதன்கிழமை கொடி ஏறி, ஜூலை மாதம் 19-ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தம் நடைபெறும்.

உழைப்பதே இவ் வழகிய மொழியைத் தாய்மொழியாக நமக்குத் தந்த இறைவனுக்கு நாம் காட்டும் நன்றித் தொண்டாகும்.

"என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ்
செய்யுமாறே"

## சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:

| | |
|---|---|
| இலங்கை-இந்தியா | ரூ. 6-00 |
| மலாயா — | $ 6-00 |

தனிப் பிரதி சதம் 10. காசு 10

## விநோத நண்பர்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறேன். அது என் உள்ள வார்த்தை; உதட்டுவார்த்தையன்று. இது ஒன்றே போதும் என்னை உனக்குத் தெரிவிக்க.

எனது வார்த்தைகள் கரடு முரடானவை; அழகற்றவை. ஆனால் அவற்றை நீ விளங்கிக் கொண்டால் அது போதும்.

நீளமாக எழுதத் தெரியாத குறையினால் இத்துடன் நிறுத்துகிறேன். மன்னிக்கவும்.

சகோதரன், இராசா.

### நடராஜன்

பழையபடி யுத்தம் தொடங்கிவிட்டது. அடே யப்பா! இந்த அழகனுடைய கனவுகளுக்கு முடிவே யில்லையோ! 'ஏறு, ஏறு, ஏறு, மேலே, மேலே, மேலே.' என்றல்லவா, இவன் அகவுகிறான்.

அந்த மடையன் இராசாவாவது விட்டுக்கொடுக்கிறானா? அவன் தான், 'இன்னுங் கெடுகிறேன் பந்தய மென்ன?' என்று நிற்கிறானே! தான் மனிதனாயிருக்கும் வரையில், பிரதிக்ஞையிலிருந்து தவற மாட்டேனென்று உறுதிகூற முடியாதாம்!

அழகனோ, இராசாவைப் பார்த்து, "உன் மனதுக்கு அப்பாற் பட்டவனா நீ? அதை அடக்கும் சக்தி உனக்கில்லையா" என்று கேட்கிறான். உலக அனுபவமற்றவன்! தன்னைப் போலவே உலகையும் நோக்குகிறான்.

இவர்களை ஒவ்வொரு சமயமும், சமாதானம் செய்து வைப்பதிலேயே பொழுது கழிகிறது!

இதுதான் எனது கடைசிச் சமரஸம்! "அழகா! உன் பிடிவாதத்தைச் சிறிது விடு. இராசா! உன் மனத்தைச் சிறிது உறுதி செய்துகொள்.

எங்கே! உங்கள் முகங்களை மலர்ச்சியுள்ளனவாகவைத்துக் கொள்ளுங்கள் பார்ப்போம்.

ஆ—அப்படித்தான்!

அட பைத்தியங்களே! உங்கள் கோபமும் நீங்களும்."

### முடிவுரை:

இது நடந்து ஒருகிழமை இருக்கும்.

கடற்கரை மணலில் நடராஜனும், அழகனும், இராசாவும் ஒருவர் கையை ஒருவர் கோத்துநடந்துகொண்டிருந்தனர்.

புயல் வாமுன் உள்ள சுவடுமில்லை! புயல் வந்தபின் உள்ள சுவடுமில்லை! விநோத நண்பர்கள்! ஆசிரியர்.

## கோப்பாய்

### சூரியோதய சனசமூக நிலையம்

சமீபத்திற் கோப்பாய் சூரியோதய சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்திற் கோப்பாய்க் கிராமச் சங்க உபதலைவர் ஸ்ரீ என். அருணம்பலம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சன சமூக நிலையங்களில் இந்நிலையம் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறதென்றும், அதற்குக் காரணம் இவர்கள் காந்தியக் கொள்கையைக் கடைப்பிடிப்பதேயென்றுங் கூறினர்.

தலைவரின் முன்னுரையின் பின், தலைவர் அவர்களுக்கு நிலையத்தின் சார்பாக உபசாரப் பத்திரம் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது.

உதவிக் காரியதரிசி திரு. எம். இளையப்பா அவர்களால் சென்ற கூட்ட அறிக்கையும், வடபகுதிச் சன சமூக நிலைய ஸ்தாபனத்தாரால் அனுப்பப்பட்ட சன சமூக நிலைய அமைப்புத் திட்டமும், தனாதிகாரி திரு. வீ. பி. சுப்பிரமணியம் அவர்களால் வரவு செலவுக் கணக்குகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 3591-ம் இலக்க வழக்கில் 1951-ம் வருஷம் வைகாசி மாதம் 11-ம் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1951-ம் வருஷம் ஆனி மாதம் 23-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி வரையில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

புலோலி கிழக்கு
முருகப்பா ஈசுரபாதம் வழக்காளி

கரவெட்டி வடக்கு
1. தம்பையா முதலியார் சபாரத்தினமும்
2. பெண் அழகம்மாவும்
எதிராளிகள்

### ஆதனம்

கரவெட்டிவதிரிக்குறிச்சியிலுறை பாலவிருக்கை. உறுதிப்படி நிலப்பரப்பு 100. கட்டிடங்களும். எல்லை: கிழக்கு, ஒழுங்கையும் சுப்பிரமணியம் பெண் செல்லம்மாவுக்குடைய ஆதனமும், வடக்கு, ஒழுங்கை. மேற்கு, கந்தையா கனகசபாபதிக்குடைய ஆதனம் தெற்கு, றோட்டு. இதில் இவ்வெல்லைக்குள் இருக்கும் கட்டிடங்கள் சித்தமாகவும் நிலத்தில் சொரியலாய் அரைவாசியும்.

S. C. Kanagasabai
கொமிஷனர்

புலோலி கிழக்கு 20-5-51 [4312]

## விஞ்ஞானத்தில் இலக்கியச் செறிவு

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

பாவைக்கூத்து என்று சம்பாஷித்தோம். இந்தியச் சகோதரர்கள் 'பொம்மலாட்டமா' என்று விசாரித்தார்கள். இரு நாட்டிலும் மறைந்து கொண்டிருக்கும் ஒரு கலை பாவைக்கூத்து. அது மறைந்தேவிடவேண்டுமா? அதற்கும் புத்துயிர் அளிக்கவேண்டுமா? என்று அந்தத் தமிழ்விழாப் பந்தல் அன்று தீர்ப்புக்கூறியது.


திங்கட்கிழமை மாலை சரித்திரப்பகுதி விரிவுரைகள் முடிந்ததும், தமிழ்விழா அதியுன்னதநிலையை அடைந்தது.

"சன்னுரிற் பூட்டிய
சூத்திரப் பாவை தான்
அங்கநார் தப்பினிற்
தன்னுலு மாடிச் சலித்திடுமோ"

என்றபாட்டு எனக்கு ஞாபகம் வந்தது. இந்த ஆயிரக்கணக்கான சனங்களையும் அந்தச் சூத்திரப்பாவைதான் ஆட்டுவிக்கிறது; என்று நினைத்தேன். தமிழிலக்கியங்களில் அறிந்ததேயன்றி, நான் நேரே பாவைக் கூத்தைப் பார்த்ததில்லை. பாவைக் கூத்து நடக்கவும், 'பாவைக் கூத்து எங்கே?' என்று சிலர் கேட்டதிலிருந்து என்னைப் போலவே பலரும் இருந்தார்கள் என்று அறிந்தேன்.

பாவைக் கூத்துக்கு முன்னர் சில உண்மையான கூத்துகள் நடந்தமையால், பாவைக்கூத்தையும் உண்மையான கூத்து என்று எங்களை நினைக்கச் செய்தது.

தமிழர்கள் எல்லோரும் தங்களை மறந்து சுவர்க்கலோக சஞ்சாரிகளெனத் தங்களை நினைக்கச் செய்து 5000 வருஷங்களுக்குமுன் காவிரிப்பூம் பட்டினத்தில இந்திரவிழா எனப்படும் கலை விழாப் பார்ப்பதெனக் கனவு கண்டு பத்திரிகையாளர் காரியாலயத்திற்கு ஓடிய அற்புதக்காட்சிகளை அடுத்தவாரம் விபரிப்பேன்.



## இலக்கிய மஞ்சரி

4-ம், 5-ம், 6-ம் புத்தகங்கள்

பாடசாலைகளில் இலக்கிய பாடமாக, நான்காம் ஐந்தாம், ஆறும் வகுப்புகளுக்கு உபயோகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| விலை: 4-ம் புத்தகம் | ... | 50 சதம் |
| 5-ம் ,, | ... | 60 ,, |
| 6-ம் ,, | ... | 75 ,, |

சுன்னாகம்: தனலக்ஷ்மி புத்தகசாலை

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா சுபாரத்தினம் அவர்களால் சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு மேமீ 27உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org